சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, பங்குனி ஏப்ரல், 1955.	பரல் ௮

"சைவசமயமே சமயம்"

தொன்மை

'சைவ சமயம்' என்பது வரலாற்றுக் காலத்துக்கு அப்பாற்பட்டது. கால எல்லை காண ஒண்ணாதது. ஏறத்தாழ இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள வலிய சான்றுகள் அந்நாள் உலகெங்கெணும் வழங்கி வந்தது சைவ சமயமென மெய்ப்பிக்கின்றது. இன்னும் வெளிப்படும் புதை பொருளாராய்ச்சி முதலியவற்றால் அக்காலம் எத்துணை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செல்லுமென்று இப்பொழுது அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. சைவம் சிவ சம்பந்தம் உடையது என்னும் பொருள் பயக்கும் ஒரு தூய செந்தமிழ்ச் சொல். எனவே, சிவசம்பந்தம் சைவம். சைவம் என்றாலும் சிவநெறி என்றாலும் ஒன்றே.

சிவநெறி தென்னாட்டில் தோன்றி உலகெங்கணும் விளங்கும் தொன்மைத் தூய தமிழ் நெறி. இவ்வுண்மை "தென்னாடுடைய சிவனே போற்றி" என்னும், திருவாசகத் திருமறையான் நன்கு விளங்கும். அம்மட்டோ அச் சிவநெறி உலகப் பொது நெறி. அவ்வுண்மை மேற்குறித்த அருட்டொடரை யடுத்து "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் மறைத்தொடர் வலியுறுத்தும். சிவன் என்னும் சொல் இயற்கை இன்ப எழில் உருவினன் என்று பொருள் தரும். இறைவன் என்னும் சொல் இயைந்தியக்கும் இயற்கைத் திருவினன் என்னும் பொருளுடையதாகும்.

பொதுமை

இச் சிவநெறி ஒன்றே உலகில் முழுமுதற் கடவுட் பெயரால் விளங்கும் பொது நெறி. ஏனைய நெறிகள் அவ்வந்நெறியை

உலகிடைப் பரப்பிய தலைவர் திருப் பெயர்களால் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாகப் புத்தநெறி, சமணநெறி, கிறித்துவநெறி, முகம்மதியநெறி என வழங்குவதைக் காணலாம். நெறிகள் அனைத்தும் நன்றே யாயினும் பள்ளிக்கூட வகுப்புப் போலவும், ஏணிப்படி ஏற்றம் போலவும் ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாய்த் தன்னைச் சார்ந்தாரை உயர்த்தி உயர்வற உயர்நலத் துய்க்கும் ஒண்மை வாய்ந்தன என உண்மை யுரைக்கும் திண்மை நெறி சிவனெறி யொன்றேயாம். ஏனைய நெறிகள் தத்தம் நெறி யொழித்து மற்றைய நெறிகள் பொய்ந்நெறிகள்—பாழ் நெறிகள் எனப் புகல்கின்றன. 'அறிதொறும் அறியாமை' காண்பது வாய்மை யெனினும் முன்னறிந்தது பின்னறிவதற்குப் பகைமையும் பாழுமன்றாகும். ஈண்டு அறியாமை என்பது புதிதாக அறியும் பொருண்மையினை முன்னறியாதிருந்ததேயாம். முன்னறிந்தது மாறுபட்டு அறியாமையாக முடிவதன்று. எடுத்துக்காட்டாக உண்மையாம் தனி மெய் முப்பத்தாறனுள் நிலம், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு மெய்களுமே கண்ணுக்குத் தோன்றுவன. ஆதலின், அந் நான்குமே மெய் வேறில்லை என்று கொண்டவன் கருதல் அளவையான் வானம் உண்டெனக் கொள்ள நேரும் போது முன்னிவ் வானை அறியாமையான் மெய் நான்கு என நிலை நாட்டியது அறியாமையாக முடியும். மெய்—தத்துவம். காண்டளவைக்கு எட்டுவது உடல் மட்டுமே. உயிர் கருதலளவையால் கொள்ளுதல் வேண்டும். உயிர் நீங்கிய உடல், தொழிற்படக் காணவில்லை. ஆகையால், உயிரே உடம்புடன் இயைந்து அதனைத் தொழிற்படுத்துகின்றது எனக் கருதுகின்றோம். முன் உடம்பே உள்ளது உயிரில்லை என்று கூறுகிறவனுக்கு அக்காலத்து உயிரை அறியாம லிருந்ததே அறியாமை. உடலை அறிந்ததும் அறியாமை யாகாது. அது போன்று ஒவ்வொரு நெறியும் ஓரோர் எல்லை வரை அறிந்து மேலுள்ளதை அறிய அவாவாமல் நின்றுவிடுகின்றது. அதனால், அவ்வந் நெறியினர் தங்கள் நெறியே நெறி ஏனைய வெல்லாம் அன்னவல்ல வென்று மயங்கிச் சொற்போரிட்டு மற்போரும் புரிந்து மாறுபட்டுக் கலாய்க்கின்றனர். தமிழ் நெறியாம் சிவனெறியாளர் முப்பத்தாறு மெய்யும் கொண்டவராதலால் ஒவ்வொரு நெறியினர்க்கும் அவ்வந்நெறிக்குத் தக்க பயன் உண்டு என உளமுவந்து உரைக்கின்றனர். இதனை விளக்கக் குருடர் யானையின் உறுப்புக்கள் ஒவ்வொன்றை மட்டும் தடவிப் பார்த்து அவ்வவ்வுறுப்பே யானை என்று தம்முள் போரிட்டனர். கண்ணுடையான் வந்து முழு யானையையும் கண்டு அவர்களுக்கு உண்மை உணர்த்தி அவர் தம் கலாத்தை அகற்றினன். எங்ஙனமென்றால் நீங்கள் சொல்லுவது ஒவ்வோர் உறுப்பு. ஒவ்வோர் உறுப்பும் தனித்தனி யானையாய்

விடாது. அவ்வவ்வுறுப்புக்களைக் கொண்டு இயங்கும் உறுப்பியே யானை என உண்மை யுணர்த்துவதாகும்.

யானையின் காலைத் தடவிய கண்ணிலான் யானை உரல் போன்றது என்றனன். கையைத் தடவியவன் உலக்கை போன்றது என்றனன். வயிற்றைத் தடவியவன் மலை போன்றது என்றனன். காதைத் தடவியவன் முறம் போன்றது என்றனன். வாலைத் தடவியவன் துடைப்பம் போன்றது என்றனன். இவர்கள் ஒவ்வொருவர் சொல்லுவதும் உண்மை. ஆனால், அவை அனைத்தும் உறுப்பு. அவை சேர்ந்த பொதுமை உறுப்பியே யானை. உறுப்பைக் கூறுங்கால் யானைக்கால் முதலியவாகக் கூறுவோம். இவ்யானை மரம், கல் முதலியவற்றாலாயது. இது போலவே உறுப்பியாகிய கடவுள்நெறியைக் கூறுங்கால் 'சிவனெறி' என்று முழுமுதற் கடவுட் பெயரால் எல்லாரும் வழங்குகின்றனர். ஏனைய நெறிகளை உறுப்பியாகிய கடவுட் பெயரால் கூறாது உறுப்பாகிய வழிப்படுத்தோர் பெயரால் எல்லாரும் வழங்குகின்றனர். இவைகளாலேயே சிவனெறி அனைத்து நெறிகளையும் உறுப்புப்போல் தழுவும் உறுப்பியாகிய பொதுநெறி என்பது புலனும். இவ்வுண்மை வரும் திருப்பாட்டுக்களான் உணர்க.

“விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின் றேனே.”
(அப்பர், ௬. ௬௦—௯.)

எரிவு - ஒற்றுமையைக் கெடுத்து வேற்றுமையை விளைக்கும் மக்கட்காழ்ப்பு. இதற்குக் காட்டு மேலைநாட்டில் பழைமையாகிய கத்தோலிக்க நெறியை எதிர்த்துத் தோன்றிய புறநெறியாகிய புரட்டசற்றாண்டு நெறி. நம்நாட்டில் பழைமையாகிய சைவ நெறிக்கு மாறுபட்டுச் செய்த வைணவ நெறி. சைவ நெறி முழுமுதற் கடவுள் பிறப்பிறப்பிலான் - அவன் சிவன் என்று கூறுகின்றது. வைணவ நெறி பிறப்பிறப்புள்ளவன் கடவுள் - அவன் திருமால்எனக் கூறுகின்றது.

“ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினான் இவை யெல்லாம் அருமறையா கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.”
(சிவஞானசித்தியார், அ, உ—௧௩)

அருமறை - மூவர்தமிழ்; முனிமொழியும் திருவாசகம். ஆகமம் - திருமூலர்தமிழ். அரனடிக்கீழ் - திருவருள் உணர்வில். அடங்கும் - அவ் வருள்வழிக் கற்று ஒழுகி அடிமையாய் இன் புறும் வழியினை எடுத்துக்காட்டி நிற்கும்.

இவ்வுண்மைகளை எண்மையாகக் காட்டுவது தமிழ்த்தாயின் அமிழ்த அருண்மொழி. அது வருமாறு:

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவாம்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."
(நல்வழி)

திருநான் மறைமுடிவாம் என்பது திருநான் மறையும் முடிவும்ஆம் எனஉம்மைத்தொகையாக் கொள்க. திருநான்மறை - அறம், பொருள், இன்பம், வீடு. முடிவு - மீளாஆளாய்ப் பேரின் பம் உறும் பேறு. தமிழ் நூல்களை வரிசைப்படுத்தி ஒரு மொழி எனக் கூறவந்த தமிழ்மூதாட்டியார் இயைபில்லாத ஆரிய மொழியையும் உடன்கூறி யிருப்பரென எண்ணுவது பெரு மயக்கே. தேவர்குறள் - செந்தமிழ்ப் பொதுமறை. மூவர்தமிழ், அறம் பொருள் இன்பமும், திருவாசகம், வீடும் கூறும் செந் தமிழ்ச் சிறப்புமறை. திருமூலர்சொல் - பேறுகூறும் செந்தமிழ்ப் பொதுஆகமம். திருக்கோவையார் - பேறும் செந்தமிழ்ச் சிறப் பாகமம். இங்ஙனம் கூறினும் எல்லாவற்றினும் ஐந்தும் ஏற்ற பெற்றி காணலாம். இதனாலேயே இந்நூல்கள் ஆதித்தமிழ் மந் திரம் அஞ்செழுத்தின் விரிஎன்ப. அவ் வஞ்செழுத்து 'சிவயசிவ' என்னும் மீநுண்மையாகும். மீநுண்மை எனினும் அதிசூக்குமம் எனினும் ஒன்றே. திருமுறைகளில் 'நமசிவய' 'சிவயநம' 'சிவய' 'சிவசிவ' என வருவனவற்றை ஓர்ந்துணர்க.

நான்மை

மென்மையின் விளைவு மேன்மையாவதுபோல் நன்மையின் விளைவு நான்மையாகும். 'சிவநெறி' 'தமிழ்நெறி' 'திருநெறி' 'ஒளிநெறி' 'இயல்நெறி' 'இறைநெறி' 'அருள்நெறி' 'அறநெறி' 'சைவநெறி' 'முறைநெறி' 'பொருள்நெறி' 'தவநெறி' முதலிய சொற்கள் பலவும் நான்கு எழுத்துக்களாலாகி யியங்குவனவும் நான்மையின் மேன்மையினை நன்குணர்த்தும். சிவன், தமிழ் என்னும் இரு சொற்களும் தமிழுக்கேயுரிய னகர ழகரச் சிறப் பெழுத்துக்களைக் கொண்டியங்குவன. எனவே, சிவன் தமிழ் என்ற இரண்டும் உயிர் உடல் போன்று பிரிக்க முடியாத ஒன்றேயாம். கொலைபுலை விடுத்த நலமே சைவம் என உலக வழக்கிலும் நூல்வழக்கிலும் மிக்குப் பயின்று வருகின்றது.

“சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்” ஆகிய செம்பொருட்டுணிவாம் சிவனெறிக்கண் கடவுள் நிலை அத்தன் அன்னை மூத்தோன் இளையோன் என நான்கு, சிலம் நோன்பு செறிவு அறிவு என நெறி நான்கு. அந்நான்கு நெறியினை உலகுக்குணர்த்திய ஒரு நிகரராகிய அப்பர், சம்பந்தர், ஆரூரர், மணிவாசகர் எனும் திருநெறிய தமிழ்முதல்வர் நால்வர். சந்தானுசிரியர் நால்வர். ‘சிவசிவ’ என்னும் தமிழ் முதலெழுத்து நான்கு. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கு. தாய், தந்தை, கொல்லர், தலைவர் எனத் துணைநான்கு. பாநான்கு, சீர் நான்கு, அடி நான்கு. பெயர் வினை இடை உரி எனச் சொன்னான்கு. இங்ஙனம் நான்மைப் பாகுபாட்டுச் சிறப்புப் பலவாம் என்க. இந்நான்மை தொன்மைத் தமிழ் முறையாம் என்பது காதலன், காதலி, பாங்கன், பாங்கி எனவும், திருமணத் தின்போது ‘வாலிழை மகளிர் நால்வர் கூடி’ (அகம்: அசு) எனவும் வரும் குறிப்புக்களான் உணர்க.

நூல்

திருமுறை பன்னிரண்டு, சித்தாந்தம் பதினான்கு, திருக்குறள் ஒன்று ஆக இருபத்தேழுமாம். இவற்றிற்கு மாறுபடாத முன்பின் உள்ள நூல்கள் நூற்பகுதிகள் கொள்ளப்படும். வேற்றுமொழி நூல்கள் வேண்டுமேல் தாய் மொழியாம் தமிழ் மொழியில் பெயர்த்தமைத்து இயைந்த அளவில் கொள்ளப்படும். திருக்கோவில்களிலும் வீட்டிலும் வழிபாடுகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருமூலர், பதினொராம் திருமுறை, சேக்கிழார், திருக்குறள், சித்தாந்தம் இவ்வெட்டும் இன்றியமையாது ஓதப்பெறுதல் வேண்டும். திருவிசைப்பாவுடன் திருப்பல்லாண்டும், திருவாசகத்துடன் திருக்கோவையாரும் உடன் ஓதப்பெறுதல் வேண்டும். ஆயின் தமிழ்த் திருமாமறை பத்தாகும். திருவுருவம் சிவலிங்கம். ஏனைய திருவுருவங்கள் இதன் விரிவேயாகும். நெறியின் பொதுமை போன்று கடவுள் உருவின் பொதுமையும் சிவலிங்கமேயாம். திருவடையாளம் திருவெண்ணீறு தீப்பிழம்பின் தொடர்பால் வருவது திருநீறு. இதுவும் பொதுமையேயாம். இம்முறைகளால் சைவ சமயமே பொதுமையும் முதன்மையும் வாய்ந்த தமிழ்ச்சமயம் என்னும் உண்மையோர்ந்து தமிழ்த் திருமாமறையால் வழிபட்டு வழிபடச் செய்து வாழ்வோமாக.

சிவனெறி செந்தமிழ் திருமுறை சித்தாந்தம் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

சிற்றூர்க் காட்சிகள்

[திரு. ஆ. சேனாபதி, இளையான்குடி]

காலை வேளை :

காகங்கள் கரையும், புட்கள்
கவ்விய இருளை யோட்டும்;
மேகங்கள் கீழ்வா னத்தில்
மெல்லிய தங்கப் பூச்சாம்;
வேகமாய் உழவர் தோளில்
மேழியைச் சாய்க்கு முன்னம்
தேகமாம் எழிலைக் காட்ட
தினகரன் உலகைப் பார்ப்பான்.

(வேறு)

பசும் புல்லின் தளிர் மேனி படர்கதிரின் வரவால்
விசும் பென்னும்துளி யோட்டும்! விரைந்தோடி விட்டில்
'குசும்' பென்று சொல்லும்படி கொஞ்சமங்கு மிங்கும்
பசும் பொன்னை நெற்கதிரை பாழாக்கும் பார்! பார்!!

ஏழை வீடு :

(வேறு)

வேய்ந்த கூரை யோர் புறம்
வீழுங் காட்சி காணவே
சாய்ந்த கதிர் ஞாயிறு
சற்று உள்ளே செல்லுவான்;
மாய்ந்து போகப் பெய்த தால்
மழை யின்ஈரம் தாங் கிடாது
ஓய்ந்து வீழும் சுவரைத்தான்
ஒட்ட மதில் வைப்பரே!

அடுப்பினி லிட்ட கஞ்சி
யாறிடு முன்கு டிக்க
இடுப்பினி லுள்ள சேலை
இறக்குவாள் சொக்கி யம்மாள்
படுக்கையாய்க் கிடந்த பச்சைப்
பாலகன் எழுந்து கொஞ்சம்
கொடுக்குமுன் தரையில் வீழ்தல்
கோலமாய் இருக்கு மாதோ!

மாசித்திங்கள்

[வித்துவான் திரு. நா. திருநாவுக்கரசு]

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல் - சொல் - 155) என்றார் தொல்காப்பியனார். தமிழிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஏதாவது ஒரு பொருளை உணர்த்துவதாகவே இருக்கும். ஆனால் காலச் சுழற்சியிலே இடுகுறி அளவோ எனக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆய்ந்து பார்த்தால் சொல்லை உண்டாக்கியவர்களின் நுண்ணறிவு தெற்றென விளங்கும். எடுத்துக் காட்டாக சொல்லுதலைக் குறிக்கும் சொற்களாக இன்று வழங்கும் கழறல், கூறல் ஆகியவைகளை எடுத்துக் கொள்வோம். இவைகள் இன்று அடுக்குவார் வாயில் அகப்பட்டுக்கொண்டு பொருள்பெற்ற செல்வன் அஃதில்லா வறியவனோடு சேர்ந்து கைப்பொருள் இழந்து இழிநிலை அடைந்தாற்போன்று, பொருளற்றுத் திண்டாடுகின்ற நிலை இரங்கத்தக்கதாகும். இவைகள் பொதுவாகச் சொல்லலைக் குறித்தாலும் சிறப்பாக அதன் வகைகளையே உணர்த்துவனவாகும். 'கழறல்' என்ற சொல்லிற்குப்பொருள் 'இடித்துக் கூறல்' என்பதாம். தஞ்சைவாணன் கோவை போன்ற அகப்பொருள் இலக்கியங்களில், தோழிமுதலியவர்கள் தலைவன் தலைவி முதலியோரின் நடத்தை முதலியவைகளைக் கண்டித்து இடித்துக் கூறும் பகுதி 'தோழி கழறல்' என்ற தலைப்பில் அமைந்திருப்பதைக் காணலாம். அடுத்துள்ள 'கூறல்' என்ற சொல் கூறுபடுத்தி, அஃதாவது பாகுபடுத்தி, வகைப்படுத்திச் சொல்லலையே குறிப்பதாகும். இங்ஙனம் நம் பண்டையோர் சொற்களை அமைத்த திறன் போற்றற்குரிய தொன்றாகும். நிற்க. இனி ஆண்டுகள் தோறும் நிகழ்கின்ற மாசித் திங்களைப்பற்றி ஆய்வோம்.

மாசித் திங்கள்—நல்ல குளிர் மிகுந்த திங்களாகும். குளிர் என்றவுடன் நமக்குப் போர்வையின் நினைவுதானே வருகிறது. ஆனால் புலவர்களுக்கோ! பிரிந்த தலைவன் தலைவியர் குளிர் மிகுதியால் வாடுவதும், சேர்ந்திருப்போர்கள் தமக்குள் காற்றுப் புகும் இடைவெளி யிருப்பினும் ஊடிக்கூடி இன்பம் துய்ப்பதும் அவர்கள் நினைவிற்கு வந்து அழகிய பாக்களைப் பாடியுள்ளனர். புலவர்கள் எதைத்தான் பாடாது விட்டார்கள் என்கிறீர்களோ! இல்லை யென்றால் பாரதி கண்ணனைக் குறித்து,

> "தீக்குள்ளே கையைவிட்டால் நந்தலாலா—நின்னைத்
> தீண்டு மின்பம் தோன்றுதையே! நந்தலாலா!"

என்று பாடி யிருப்பாரா என்ன!

மாசித் திங்களில் குளிரைத் தருவது எது? பனிதானே! அப்பனியைத் தருவது எது? மேகம் தானே! அம்மேகம் கருமேகமா? அல்லது வெண் மேகமா? நிலநூலில் (Geography) மேகம் எங்ஙனம் உண்டாகிறது என்பது பற்றியும் கருமேகம் (நோயைக் குறிப்பிடவில்லை, காள மேகத்தையே குறிப்பிடுகிறேன். காளமேகம் என்றால் புலவனையல்ல; நான் குறிப்பிடுவது மழை பொழியும் மேகத்தையேயாகும்) வெண்மேகம் இவைகளின் தோற்றத்தையும், இவைகளில் மழை பொழிவது எது? பனி பொழிவது எது? என்பது பற்றியும் படித்திருப்பீர்கள். வெண் மேகம் தானே பனியைத்தருவது.

அவ் வெண் மேகம் மாசித் திங்களில் நிறைந்து காணப்படுவதைப் பார்க்கிறீர்கள் அல்லவா? அதனால் தானே இம்மாதத்தில் பனியும், குளிரும் மிகுதியாக இருக்கிறது. எனவேதான், ஔவையாரும் "தையும் மாசியும் வை அகத்து உறங்கு" என்றருளினர். அத்தகைய வெண்மேகத்தை எங்ஙனம் அழைக்கிறோம்? மாசி என்று தானே அழைக்கிறோம். வெண் மேகத்தை அஃதாவது பனியைத் தரும் மேகத்தை 'மாசி' என்றழைத்தல் தொன்றுதொட்டு நம் தமிழகத்தார் வழக்கில் இருந்து வந்திருக்கிறது. எனவே தான் பனியைத் தருகின்ற வெண்மேகமாகிய 'மாசி' மிகுந்திருக்கின்ற இத் திங்களை 'மாசி' என்றழைத்தனர்.

இங்ஙனம் பொருள் பொதிந்த சொற்கள் பல இன்று நம்மவரால் பொருளிலாச் சொற்களாகப் பயன் படுத்தப்பட்டு, வழக்காறிழந்து வருகின்றன. புதிய உண்மைகளை விஞ்ஞானத்தால் கண்டு பிடிக்க முடியாவிடினும் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான விளைவுகளைப் பற்றிப் படித்துத் தேர்வில் வெற்றி பெறுது படையெடுப்பவர்கள் மிகுந்த நாடு தானே இது! எனவே அறிவு சான்ற நம் மூதாதையர் ஆக்கிய பொருளுள்ள சொற்களின் பொருளை உணராதிருப்பதில் வியப்பொன்றும் இல்லையல்லவா!

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு: உக, பரல் எ, ௩௩௫-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம்-௪௧.

கல்லாமை

அஃதாவது கற்றலைச் செய்யாமை. மேற்கற்றலின் சிறப்புக் கூறினார்; அஃது ஆண்டடங்காமை கண்டு விதிமுகத்தாற் கூறிய அதனையே ஈண்டு மறைமுகத்தாற் கூறுகின்றார். எனவே, கல்லாமையின் இழிவு கூறி, அவ்வாற்றானே கல்விச் சிறப்புப் பெறுவிப்பா ராயினர். ஆசிரியர் அதிகாரமொன்றற்குப் பத்துப் பாட்டாக வரையறை செய்துகொண்டு நூலியற்றுகின்றாராத லின், கூறக் கருதிய பொருள் அவ்வரையறையின் அடங்காத வழித் தாம் வகுத்த வரையறையுங் கெடாமே, கருதிய பொரு ளுங் கெடாமே, அப் பொருளைப் பல்லாற்றாற் பகுத்து அவ் வாற்றா னதிகாரம் வேறாய் வகுத்துக் கூறுவர். இதனை யீண்டே யன்றிப் பிறாண்டுங் காணலாம். அதிகார இயைபு கூறாதே கொள் ளக் கிடந்தது.

இவ் வதிகாரத்தில், கல்லாதார் சான்றோ ரவையிற் சிறவா மையும், தமக்கும் பிறர்க்கும் அவர் பயன்படாமையும், அவர் இழிவும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர், முதற்கண் கல் லாதார் சான்றோரவையிற் சிறவாமை கூறுகின்றார் :

௪௦௧. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(இ - ள்.) *நிரம்பிய நூல் இன்றி - குறைவற்ற நூலறிவில் லாமல், கோட்டி - (சான்றோர்) அவையில், கொளல் - (ஒன்றைக் கூற) மேற்கொள்ளுதல், அரங்கு இன்றி - வகுப்பறை இல்லா மல், வட்டு ஆடியற்றே - வட்டாடுதல் போலும் (எ-று.)*

(இ - து.) *விரிந்த நூற் பயிற்சியில்லாமல் சபையில் ஒன் றைப் பேசப்புகுதல் அறைவரையாது வட்டாடப் புகுவது போலும் (எ-ம்.)*

அரங்காவது சூதாடுதற்கு வகுத்த அறைவட்டு சூதாடு கருவி; உருண்டை வடிவிற்று. வட்டாடுதலாவது, உருண்டை வடிவிற்றாய அச் சூதாடு கருவியை உருட்டுதல். இவை யின்ன வாதலைக் 'கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்' என வரும் நற்றிணை (௩-ஆம்) செய்யுளா

னறிக. 'நெல்லி வட்டாடும்' என்றது நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு ஆடும் என்றவாறு. 'ஒன்றை யுரைத்தலை' என்பது எஞ்சி நின்றது. கோட்டி - அவை; ஏழாம் வேற்றுமையுருபு தொக்கு நின்றது. மேற்கொளல் எனற்பாலது முதல் குறைந்து நின்றது.

அரங்கின்றி வட்டாடுதல் நெறிப்படாதாதலோடு கண்டார் நகைக்கவுங் காரணமாதல்போல, விரிந்து கல்வியின்றிச் சபையி லொன்றைச் சொல்லப்புகுதல் நெறிப்படாதாகிச் சான்றோர் நகைக்கக் காரணமா மென்றவாறு.

கல்லாதான் சொல்லாடல் இத்தகைத் தென்றதிது. (க)

சொல்லாட விரும்ப லித்தகைத்தா மென்பது வருங் குறள்:

௪0௨. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(இ - ள்.) கல்லாதான் - (பரந்துபட்ட நூற்பொருள்களை யெல்லாம் குறைவறக்) கல்லாதவன், சொல் காமுறுதல் - (சான்றோ ரவையின் கண் ஒன்று) சொல்லுதலை விரும்புதல், முலை இரண்டும் இல்லாதாள் - இரண்டு முலைகளும் (இயல்பாகவே) இல்லாதவள் ஒருத்தி, பெண் காமுற்றற்று - (தனக்கமைந்தது பேடித்தன்மையே யாகவும் தான்) பெண் தன்மையை விரும்பி னாற் போலும் (எ - று.)

(இ - து.) கல்லாதவன் கற்றாரவையில் ஒன்றைச் சொல்ல விரும்புதல், பேடி பெண்தன்மையை விரும்புதல்போலாம் (எ - று.)

இனைத்தென அறிந்த பொருளாகலின், இரண்டும் எனத் தொகையொடு உம்மை கொடுத்தார். முலையிரண்டு மில்லாதவள் பேடி. அவள் பெண்மையை விரும்புதல் நிறைவேறாது; நிறை வேறினும் நகைக்கிடமாம். கல்லாதவற்கும் அங்ஙனமே. சொல் லக் கருதினும் அது கைகூடாது; கைகூடினும் அது நகைக்கிட மாம் என்பதாயிற்று.

கல்லாதார் கற்றாரவையிற் சொல்லாட லித்தகைத்தா மென்றதிது. (௨)

சொல்லாடாமையே நன்றென்பது வருங் குறள்:

௪0௩. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(இ - ள்.) கல்லாதவரும்—, கற்றார்முன் - கற்றார் (கூடிய அவையின் கண்ணே அவர்) முன்னாக, சொல்லாது இருக்கப் பெறின் - (தன் விருப்பத்தின் வழியே சென்று யாதொன்றினை யும்) சொல்லாதிருத்தல் கூடுமாயின், நனி நல்லர் - மிகவும் நல்லவராவர் (எ - று.)

(இ - நு.) கல்லாதவர் கற்றாரவையில் வாய்திறவாமை நன்று (எ - ம்.)

கல்லாதவரும் என்றதில் உம்மை இழிவு சிறப்பு. அவர்க்கு நன்மையாம் என்பார் நன்மையை அவர்க்கேற்றி அவர் 'நல்லர்' என்றார். தமக்கு நன்மை யாவதறிந்து அவ் வழியொழுகும் அறிவும் ஆற்றலும் இல்லாராதலின், அவர்க்கஃது அரிதென்பார் 'இருக்கப்பெறின்' என்றார். அவர்க்கு நன்மையாவது அவையில் இகழப்படாமை.

கற்றாரவையில் கல்லார் சொல்லாடாமை நன்றென்றது. (௩)

நற்பொருளாயினும் சொல்லலாகாதென்பது வருங் குறள் :

௪௦௪. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ - ள்.) கல்லாதான் - கல்லாதவனது, ஒட்பம் - அறிவு டைமை, கழிய நன்றாயினும் - (ஒரோவழி) மிகவும் நன்றாயினும், அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையோர் (அதனை அறிவு டைமையாகக்) கொள்ளமாட்டார் (எ - று.)

(இ - நு.) கல்லாதவன் ஒரோவழி அறிவுடைய சொற் களைச் சொன்னானாயினும் கற்றறிவுடையோர் அவற்றை ஏற் றுக் கொள்ளார் (எ - ம்.)

ஒட்பமாவது ஒண்மை; அஃதாவது ஒளியுடைமை; அஃதா வது அறிவொளியுடைமை. நன்றாகாது ஆயினும் எனப் பொருள்படுதலால் உம்மை எதிர்மறைப் பொருளது. ஆமாறெங் ஙனமோ எனின், நத்தை மணலிற் செல்லும்போது அதன் குறிப்பின்றியும் ஒரோவழி அதன் சுவடு ஓரெழுத்தாயமைதல் கூடுமாதல்போலக் கல்லாதான் பிதற்றும் பலவற்றுள் ஒன்று ஒரோவழி ஒட்பங் கழிய நன்றாதலு முண் டென்க. நத்தை செல் லுஞ் சுவடு ஒரோவழி எழுத்தாயமையி னதனை ஏரலெழுத் தென்ப. அல்லதூஉம் கல்லாதான் அறிவுடையனாயினும் அவன் தான் கண்ட ஒண்பொருளைச் சொல்லிக்காட்ட வகையறியாது பிதற்று மாதலின், அப் பிதற்றிலிற் றோன்றிக் கரக்கும் ஒண்

பொருளை, நீர்மேலெழுத்தெனக் கருதி கற்றறிவுடையோர் கொள்ளா ரென்றது மொன்று. 'கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்' (பழமொழி-௬௬எ) என்றார் முன்றுறையரையரும்.

கல்லாதானு மொட்பமுடைய னாதல் கூடும் என்றமையின் 'அறிவுடையார்' என்றது, கற்றறிவுடையவ ராதல் பெறுதும்.

கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார் அவையிடைக் கொள்ளப்படாது என்றதிது. (௪)

அதற்குக் காரணங் கூறுவது வருங் குறள் :

௪0௫. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ-ள்.) கல்லா ஒருவன் - கல்லாத ஒருவனது, தகைமை- (தற்)பெருமை, தலைப்பெய்து -(கற்றோரவையிற் கற்றோருடனே) ஒன்று கூடி, சொல்லாட -(ஒன்றைச்)சொல்ல, சோர்வுபடும் - கெடும் (எ-று.)

(இ-து.) கல்லாதவன் கொள்ளும் தற்பெருமை கற்றோரவையில் வாய்திறந்தாற் கெடும் (எ-ம்.)

தகைமையாவது, யான் அறிவுடையே னெனத் தன்னைத் தானே மதிக்கும் மதிப்பு - தற்பெருமை. தலைபெய்தல் - ஒன்று கூடல். கல்லாதவர் தாம அறிந்ததொன்றை உரைக்குமாறறிந்து உரைக்கமாட்டா ராதலின், சொற்சோர்வுபட்டு மதிப்பழிவர் என்பதாம்.

இவை ஐந்து பாட்டானுங் கற்றோ ரவையிற் கல்லாதார் சிறவார் என்பது கூறப்பட்டது. (௫)

கல்லாதார் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமை கூறுவன வரும் மூன்று குறள்கள் :

௪0௬. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(இ-ள்.) கல்லாதவர்—, உளர் - (மக்களுருவிற் காணப் படுதலால்) உள்ளனர், என்னும் மாத்திரையர் அல்லால் - என்று சொல்லப்படும் அவ்வளவினரேயன்றி(ப் பயனளவிற் பார்த்தால், தமக்கும் பிறர்க்கும்), பயவா - பயன்படாத, களர் அனையர் - களர்நிலத்தோ டொப்பர் (எ-று.)

(இ-து.) கல்லாதார் களர்நிலம்போலத் தமக்கும் பிறர்க்கும் பயன்படார் (எ-ம்.)

களர்நிலத்து உப்பு விளைவதுண்டாதலால், அஃதன்றென்பதற்குப் 'பயவாக் களர்' என்றார். அது தானும் நீர்ப்பாய்ச்சல் முதலிய பயன்களைப் பெறாது உயிர்கட்கும் உணவு முதலியன உதவாததுபோலக் கல்லாதார் தாமும் பயன்பெறாது பிறர்க்கும் படாரென்றவாறு.

கல்லாதார் தமக்கும் பிறர்க்கும் பயனிலரென்றறிந்து. (௬)

அவர் அழகும் பயன்படுவ தன்றென்பது வருங் குறள் :

சஎ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(இ - ள்.) நுண்மாண் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டு, நுழைபுலம் - (பல நூல்களினுஞ்) செல்லும் அறிவு, இல்லான் - இல்லாதவனுடைய, எழில்நலம் - எழுச்சியோடு கூடிய அழகு, மண் - மட்சாந்தால், மாண்புனை - மாட்சிமைப்படப் புனைந்த, பாவையற்று - பாவையினுடைய (எழுச்சியோடு கூடிய அழகைப்) போலும் (எ - று.)

(இ - து.) நூலறிவில்லாதவனது அழகு மண்ணாலான பதுமையின் அழகு போலும் (எ - ம்.)

அறிவிற்கு நுட்பமாவது, காண்டற்கரிதாய் நூலிடைக் கரந்து கிடந்த கருத்தையெல்லாம் கதுமெனச்சென்று கவர்ந்து கொள்ள வல்லதாதல்; மாட்சியாவது, பொருள்களைக் கடிதிற் காண்டலும் குற்றமுங் குணமுங் கலந்துகிடந்தவிடத்தில் எளிதி லவற்றைப் பிரித்துக் குற்றத்தைத் திருத்தியுங் குணத்தை மிகுத்துங் கொள்ளுதலும், கொண்ட பொருள் மறவாமையும் முதலாயின. பாவை-பாவையின் அழகை உணர்த்தி ஆகுபெயராய் நின்றது. எழினலம் - இருபெயரொட்டு; எழிலாகிய நலம் என்க. அஃதாவது எழுச்சியோடுகூடிய நலம் என்றது வளர்ந்து அமைந்ததாயினும் இன்னும் வளரு மென்பது தோன்ற நிற்கு நலமென்றவாறு. 'ஒப்புமுருவும் வெறுப்பு மென்றா-கற்பு மேரு மெழிலு மென்றா—' எனவரும் தொல்காப்பியப் பொருளியல் (௫௪-ம்) சூத்திர உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'ஏராவது எழுச்சி; அஃது எழுகின்ற நிலைமையென நிகழ்காலமே குறித்து நிற்கும். எழிலாவது, அங்ஙனம் வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்' என்றார். 'உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிது' (சிந்தாமணி-உஎ௫உ) என்ப வாகலான், அங்கக் குறைபாடின்றி அழகோடு கூடிய மக்களுடம்பு பெறுதலும் பயனு

டைத்தே யாயினும், கல்வியறிவில்லாவழி அது சிறவா தென்ப தாம். (எ)

கல்லாதார் அழகு பயன்படா தென்றதிது.

அவர் செல்வமும் பயன்படா தென்பது வருங் குறள் :

௪௰௮. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

(இ-ள்.) கல்லார்கண் - கல்லாதவரிடத்தே, பட்ட - உண்டான, திரு - செல்வமானது, நல்லார்கண் - (கற்று) நல்லாராயினரிடத்தே, பட்ட - உண்டான, வறுமையின் - வறுமையினும், இன்னாது - துன்பஞ் செய்வதாம் (எ-று.)

(இ-து.) கற்றார் வறுமையினும் கல்லாதார் செல்வம் துன்பந் தருவதாம் (எ-ம்.)

மேற் கல்லார் என்றலின், நல்லார் என்றது கற்று நல்லாரை யாயிற்று. 'இன்மையி னின்னாத தியாதெனின் இன்மையி, னின்மையே யின்னா தது' (குறள் - ௧௦௪௧) என்பதாகலான், 'வறுமையினின்னாது' என்றார். வறுமையினும் எனற்பால திழிவு சிறப்பும்மை தொக்கு நின்றது. நல்லார் கட்படின் அவருக்கும் பிறருக்கும் நன்மை பயப்பதாகிய செல்வம், கல்லார்கட் படின், குரங்கின் கைப்பட்ட கொள்ளியே போல அவருக்கும் பிறருக்கும் தீமைபயக்கு மென்பது கருத்து.

இவை மூன்று பாட்டானும் கல்லார் எவ்வாற்றானும் தமக்கேனும் பிறர்க்கேனும் பயன்படாமை கூறப்பட்டது. (அ)

கல்லாதார் இழிவும் கற்றார் உயர்வும் கூறுவன வரு மிரு குறள்கள் :

௪௰௯. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(இ-ள்.) கல்லாதார்—, மேற்பிறந்தா ராயினும் - உயர்ந்த குலத்திற் பிறந்தாரானாலும், கீழ்ப் பிறந்துங் கற்றார் - தாழ்ந்த குலத்திற் பிறந்தும் கல்வியுடையராயினாரது, அனைத்து - (பெருமை) அளவினதாகிய, பாடுஇலர் - பெருமையில்லாதவராவர் (எ-று.)

(இ-து.) கற்றவர் குலத்தில் தாழ்ந்தவராயினும் உயர்ந்தவரே; கல்லாதவர் குலத்தில் உயர்ந்தவராயினும் தாழ்ந்தவரே (எ-ம்.)

'அனைத்திலர்' என்பது அனையென்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த எதிர்மறைக் குறிப்புவினையாலணையும் பெயர். ஆசிரியர் உயர்குடிப்பிறப் புடம்பட்டுக் குடிமையென்னு மோரதிகாரம் (௯௬) வகுத்தாராயினும், குடியுயர்வு ஒழுக்கம் கல்வி முதலியனவற்றானல்லது தோன்றே யொழியப் பிறிதில்லையாகலின், அவ்வொழுக்கம் முதலாயின இல்வழிக் குடியுயர்வு மில்லையா மென்பதனை ஆண்டேயன்றிப் பிறாண்டும் 'ஒழுக்க முடைமை குடிமை' (௧௩௩) எனவும், 'பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்' (௧௩௪) எனவும், 'மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங், கீழல்லார் கீழல் லவர்' (௯௭௩) எனவுங்கூறி ஒழுக்கம் கல்வி முதலியவாக உயர்வுக்குஆவன பிறவின்றிப் பிறப்பினான்மட்டும் உயர்வு தாழ்வு வேண்டற்க வென்பார் 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும்' (௯௭௨) எனத் தெளியக் கூறினமையின், உயர்குடிப் பிறந்தாராயினுங் கல்லாதார் உயர்வுடையவராகார் என்பதும், தாழ்குடிப் பிறந்தாராயினுங் கற்றார் உயர்வுடையவ ராவார் என்பதுமாம். இக் கருத்தானே நாலடியாரிற்,

'களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்' (௧௩௩)

'நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்' (௧௯௫)

எனக் கூறினார் பிறரு மென்பது. அல்லதூஉம் பிறப்புயர்வு எடுத்த பிறவியோடு ஒழிவதாகக் கல்வி 'எழுமையும் ஏமாப் புடைத்து' (குறள்-௩௯௮) ஆகலான், அதனானாய உயர்வு சிறந்ததாயிற் றென்க.

கற்றார் ஏனையாரின் உயர்ந்தா ரென்ற திது. (௯)

கற்றாரும் ஏனையாரும் ஒப்பாகா ரென்பது வருங் குறள் :

௪௧௦. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(இ-ள்.) இலங்கு நூல் - விளங்கிய நூல்களை, கற்றாரோடு—, ஏனையவர் - மற்றவர்களை (உவமிக்குமிடத்து), விலங்கொடு - மிருகங்களோடு, மக்கள் அனையர் - மக்களை (உவமித்தாற்) போல்வர் (எ - று.)

(இ - ரு.) கற்றாரையும் கல்லாரையும் உவமித்தல் மக்களையும் மிருகங்களையும் உவமித்தல் போலும் (எ - ம்.)

ஒடு என்பது மூன்றும் வேற்றுமை யுருபு; ஒப்பலொப்புப் பொருளில் வந்தது. ஆசிரியர் சேனாவரையர் மூன்றும் வேற்றுமைப் பொருள் வேறுபாடு விரிக்குஞ் சூத்திரவுரையில், அதனோடியைந்த வொப்ப லொப்புரை - "பொன்னொடிரும்பனையர் நின்னொடு பிறரே" என்பது; ஒப்பல்லதனை யொப்பாகக் கூறலின் ஒப்ப லொப்புரையா யிற்று' என்றது காண்க. 'விலங்கின் மக்கட்கேற்றமாகிய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்ல ரென்பதாம்' என்றார் ஆசிரியர் பரிமேலழகர். விலங்கு ஏனையாரும் மக்கள் கற்றாருமாகப் பொருள்கொள்ளக் கிடத்தலின், இது மயக்க நிரனிறை. எதிர்நிரனிறை யெனினும் ஒக்கும்.

இவ் வதிகாரத்தில் முதல் ஐந்து பாட்டுக்களால் கற்றோரவையிற் கல்லாதார் சிறவார் என்பதும், அடுத்த மூன்று பாட்டாற் கல்லார் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையும், இறுதி இரண்டு பாட்டாற் கற்றார் உயர்வும் கல்லார் தாழ்வும் கூறப்பட்டன. (௧௦)

(தொடரும்)

திருவாசகத் தேன்

மூவர் முதலிகளருளிய தேவாரத்தோடொத்து விளங்கும் திருமறை, திருவாசகமாகும். திருவாசகம் கருங்கல் மனத்தையும் கரைக்க வல்லது; பத்திச்சுவையும் கனிவும் இனிமையும் தந்து இன்ப அன்பைப் பெருக்குவது; இதன் அருமை பெருமைகளை யுணர்ந்த மேனாட்டறிஞரும் தத்தம் மொழிகளில் பெயர்த்தெழுதிப் பாராட்டுவாராயின், இதன் சிறப்பை என்னெனப் பகர்வது? இதனானே, 'திருவாசகத்துக்கு உருகார், ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழியும் வழங்கலாயிற்று.

இப் பெருமறையை ஓதி உணர்ந்து உளமுருகல் நம் தமிழ் மக்களின் உரிமையும் கடமையுமாகும்.

'அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?'

என்பதில் எவ்வளவு உருக்கமும் எளிமையும் கனிவும் இருக்கின்றன பார்மின்!

—செல்லூர்க்கிழார்.

பாரியொடு மூவேந்தர்போர்

[வித்துவான். திரு. செ. வேங்கடராமச் செட்டியார்.]

பாரி என்பவன் கடைச்சங்க காலத்திருந்த எழுவள்ளல்களில் ஒருவன். வேளிர்குலத்தைச் சேர்ந்தவன். வேள்பாரி என்றும் இவன் கூறப்படுகின்றான். இவன் முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன். பொய்யாநாவினையுடைய 'கபிலர்' என்னும் பெரும்புலவர்க்கு உயிர் நண்பன். கொடையிற் சிறந்தவன். இவன், ஒருநாள் காட்டிற்குச் செல்லநேர்ந்தபொழுது முல்லைக்கொடி ஒன்று காற்றால் அசைந்து ஆடுவதைக் கண்டு, அது கொள்கொம்பின்றி வாடியாடியதாகக் கருதித் தன் அன்புளங் கசிந்து தன் தேரையே அக்கொடியேறிப்படருமாறு கொடுத்து வந்த பெருங் கொடையாளன். இவன் கொடைச் செயல்கள் பலவற்றிலும் முல்லைக்குத் தேரீந்த செய்தியே பெருமையாகப் பல புலவர்களாலும் பாராட்டப்படுகின்றது. புலவர்கள் நாத்தழும்பேறுமாறு புகழ்ந்து பாடினால், அவர்க்கு வேண்டியது கொடுப்பதே ஏனைவள்ளல்கள் இயல்பாயிருக்க, முல்லைக்கொடி அவ்வாறு நாக்கில் தழும்புண்டாம்படி பாடாமலிருக்கவும் பாரி தன் ஒலிக்கின்ற மணிகள் கட்டிய நெடியதேரைக் கொள்க என்று கொடுத்தான் என்று பாரியின் கொடைமடத்தைக் கபிலர் பாராட்டுகின்றார்.

"பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி." (புறம்-உ00)

என்பது காண்க.

ஓரறிவுயிராகிய ஒரு முல்லைக்கொடிதானும் தன்முன் வருந்தலாகாது என்றுகருதிப் பாரி தன் நீண்ட பெரிய தேரையே கொடுத்துவந்த அருமையைப் பாராட்டிச் சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர்,

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரி."

என்று கூறியிருத்தல் காண்க.

இத்தகைய புலவர் பாடும் புகழுடைய பெருவள்ளலாகிய பாரியோடு மூவேந்தர் போர்செய்த செய்தி புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. அப்போர் நிகழ்ச்சியைப் பாடலாக அமைத்த

வர், பாரியின் உயிர் நண்பராய்—அமைச்சராய்—அவைக்களப் புலவராய் விளங்கிய 'கபிலர்' என்னும் பொய்யாநாவிற் புலவரே யாவர். தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவராகிய சேர சோழ பாண்டியர்கள், பாரியோடு போர் செய்யக்கருதி அவன் பறம்பு மலையை முற்றுகையிட்டிருந்தார்களாக, அம்மூவேந்தரையும் நோக்கிப் பொய்யில் புலவராகிய கபிலர் கூறிய பாடல்கள் மூன்று. (க0௯, ககO, ககக புறம்.) அவை,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்கு பயனுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே."

என்பதும்,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற்கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே."

எனபதும்,

"அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதால் பாடினள் வரினே."

என்பதுமாம்.

இம்மூன்று பாடல்களிலும் பாரியோடு மூவேந்தர் போர் செய்யவந்தமைக்குரிய காரணம் வெளிப்படையாகக் கூறப்பட வில்லை. ஊகித்தே உணரவேண்டியுளது. பாரி, தன் கொடைப் பெருமையால் உலகு புகழ் பெருவள்ளலாக விளங்கினான். இரப்பார்க்கொன்றீவார் மேல் புகழ் நிற்பது இயல்புதானே! 'வண்புகழ்மூவர்' என்று பாராட்டப்பெற்ற சேர சோழ பாண்டி யர்கள் புகழ், பகல்விளக்காகப் பாரியின் புகழ் பகலொளிபோல் பரவியது. இதனை,

"நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னடே." (புறம் : ௧௧௪)

என்ற அடிகளால் அறியலாம். பிற புரவலர்யாரும் கொடை யாகிய தங்கடமையை மறந்துவிட்ட நிலையில் பாரி, முரசுடைய மூவேந்தரைக் காட்டிலும் இரவலர்களுக்கு ஈந்தான் என்பது கருத்து. பாரி, தானுளும் நாட்டால் செல்வத்தால் மூவேந் தரினும் மிகமிகத் தாழ்ந்தவனாயினும் கொடைப்புகழால் அவ ரினும் பன்மடங்கு புகழுடையனாதலை முடியுடை வேந்தர் மூவரும் பொறாராயினர். பாரியைவிட மூவேந்தர் புகழ் பெற வேண்டுமாயின் அப் பாரியைக் காட்டிலும் பெருங்கொடை யாளர்களாக அவர்கள் மாறியிருந்தால் பழிப்பில் புகழ் படைத் திருப்பார்கள். அம் மூவேந்தர்க்கும் பணமிருந்தும் மனமில்லை. அவர்கள் பொருளிற் குறையிலராயினும் அருளிற் குறையுடைய ராயினர். எனவே, அந்நேரிய வழியில் பாரியினும் புகழ்பெற நினையாது தம்மினும் மிகுபுகழுடைய பாரியைக் கொன்று பெருமையடையலாமென நேர்மையற்ற நினைவு கொண்டனர். மண்மிசைத்தன் தண்ணிலவு சொரிந்து மன்னுயிர்க் கின்பஞ் செய்கின்ற திங்களில்லாத வானத்தில், விண்மீன்கள் ஒளிவீசிச் சிறப்படையவில்லையா? மாரிபோல வாரி வழங்கி இரவலரைப் புரந்த பாரி மறைந்த நாட்டில் மூவேந்தர் சிறப்பெய்துவதும் அப்படித்தான் என்பதை அழுக்காறு நிறைந்த அம் மூவேந்தர் கள் அப்பொழுது எண்ணிப்பார்த்திருக்கமாட்டார்கள்.

எனவே, மூவேந்தரும் பாரியிடம் பகைமை கொண்டார் கள். அவனை அழிக்கும் வழியைக் கண்டார்கள். படையொடு வந்து பறம்புமலையைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு சிற் றரசனைவெல்ல வேந்தர்மூவரும்படையெடுத்துவருவது போரறம் அன்று என்பதையும் நினைத்திலர். பறம்பு மலையைச் சுற்றி யுள்ள மரங்கள் தோறுந் தங்கள் யானைகளைக் கட்டினார்கள். அம்மலையைச் சுற்றிலுமுள்ள நிலந்தொறும் தேர்களை நிறுத்

தினார்கள். பறம்பு மலையிலுள்ள பாரியும் அவன் படைவீரர்களும் புறத்தே போகாதபடி காத்துநின்றார்கள்.

மூவேந்தர் பறம்பு முற்றியிருந்த நிலையையும் அவர்கள் நினைவையும் கண்டார் கபிலர். அவ் வேந்தர்க்கு அறிவுறுத்துகின்றார். "பாரியின் பறம்புமலையை முரசுடை வேந்தராகிய நீவிர் மூவிரும் படைவீரரோடு சூழ்ந்து காத்து நின்றாலும் அம் மலை நும்மால் கவரத்தக்க எளிமையுடையதன்று. பறம்பு மலையிலுள்ளோர் புறத்துப் போகாதபடி சூழ்ந்திருந்தால் வருந்திப் போர் செய்யவேண்டாது எளிதில் வென்றுவிடலாம் என்ற எண்ணத்தால் நீவிர் சூழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் எத்துணைநாள் முற்றுகையிட்டிருப்பினும் உணவுப் பொருளின்றி நாங்கள் வருந்திப் பணிந்துவிட மாட்டோம். எங்கள் பறம்பு மலையில் உழவர்கள் உழுது விளைவு செய்யாமல் இயற்கையாக விளையக் கூடிய நால்வகை உணவுப் பொருள்கள் இருக்கின்றன. மூங்கில் நெல் நன்கு விளைந்திருக்கின்றன; இனிய சுவையுடைய பலாப்பழங்கள் நிறையப் பழுத்திருக்கின்றன; செழுமையான வள்ளிக்கிழங்கு வளம் பெற்றிருக்கின்றது; தேனழிப்பாரின்றித் தேனடைகள் தேனைச் சொரிகின்றன; பாரியின் பறம்பு மலை உயரத்தால் வானிடத்தைப் போன்றுளது; அம் மலையிலுள்ள சுனைகள் வானத்து மீன்களைப் போலப் பலவாக இருக்கின்றன; எனவே, நாங்கள் புறத்துப் போகாது மலையிலிருந்தே குறைவின்றி வாழ்தற்குரிய உணவும் நீருமுடையேம்; ஆதலால், நீங்கள் மரங்கள் தோறும் கட்டிய யானைகளையுடையீராயினும், விளைநிலங்கள் தோறும் பரப்பிய தேரினையுடையீராயினும் உங்கள் முயற்சியால் அம் மலையைக்கொள்ளவியலாது; உங்கள் வாளைக் கண்டஞ்சிப் பாரி தன் மலையைத் தாரான்; அம் மலையைக் கொள்ளும் வழியை யானறிவேன். அவ்வழியாதெனின்? மணமுடைய தழைத்த கூந்தலையுடைய நும் விறலியர் பின்தொடர வடித்து முறுக்கிய நரம்பினையுடைய சிறிய யாழைப்பண்ணி வாசித்து ஆடியும் பாடியும் சென்றால் பாரி நுமக்குத் தன் நாட்டையும் மலையையும் கொடுப்பான்."

இவ்வாறு கபிலர் கூறியும் மூவேந்தர் முற்றுகை விடவில்லையாதலின், ஒருகால் தம் படைவலிமையால் நம் நாட்டைக் கைப்பற்றவுங்கூடும் என்று பாரியும் கபிலரும் எண்ணிப் பறம்பு நாட்டிற்குரிய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டார்கள். போரில் தோற்போம் என்ற உறுதி பாரிக்கும் கபிலர்க்கும் வந்த பின்னரே இதைச் செய்திருக்கவேண்டும். செல்வமும் யாக்கையும் உள்ள பொழுதே பிறர்க்குக் கொடுத்துப் பெரும்புகழடைவது சிறந்த தல்லவா? மூவேந்தர்க்குத் தோற்

ருல் பின் எவ்வுடம்பைக்கொண்டு எப்பொருளைப் பிறர்க்குக் கொடுப்பது? என்று எண்ணிப்பார்த்தே இங்ஙனம் செய்திருக்கவேண்டும். இக்கொடைச்செயலுக்குப் பிறகு கபிலர் ஒரு பாடலைப் பாடியுள்ளார். (௧௧௦ - புறநானூறு)

"வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையினையுடைய நீவிர் மூவரும் கூடிப் பொருதாலும் பறம்பு கொள்ளுதற்கரிது. தண்ணிய நல்ல பறம்பு நாடு முந்நூறு ஊரையுடையது. அம் முந்நூறு ஊரையும் பரிசிலர் பெற்றுக் கொண்டனர். நீவிர் பாடிக் கொண்டு பரிசிலராய் வந்தால் நுமக்கு யாமும் பாரியு முள்ளேம்; அதுவேயன்றிப் பறம்பு மலையுமுண்டு" என்ற கருத்துடையது அது. மூவேந்தர் வஞ்சித்தும் பாரியைக் கொல்வார்களோ என்ற ஐயம் கபிலர்க்குத் தோன்றியதால் அவர் படையைக் கூறும்பொழுது "வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படை" என்ற பொருளுடைய "கடந்தடுதானை மூவிரும்" என்றார்.

இவ்வாறு கபிலர் கூறியும் மூவேந்தர் முற்றுகை நீங்காதிருக்கவே அவ் வேந்தரை முன்னிலைப் படுத்திக்கூற விரும்பாது படர்க்கையில் வைத்துக்கூறுகின்றார். ஒரு முறைக்கு இருமுறை சொல்லியும் கேளாதார்க்கு மீண்டும் கூறுவது பொருந்தாதன்றோ?

அவர் கூறியது கரிய பெரிய பறம்பு மலை இரங்கத்தக்க நிலையுடையதன்று. வேலால் வெல்லுதல் வேந்தர்க்கும் அரிது தான்; ஆனால் நீலமலரையொத்த மையுண்ட கண்களையுடைய விறலிக்கு எளிது; அவள் பாடிக்கொண்டு வந்தால்" என்ற கருத்துடைய பாடல் (புறம். ௧௧௧)

இவ்வாறு கபிலர், பாரியின் பகைவர்க்கரியனும் பண்பினையும் இரவலர்க்கெளியனும் இயல்பினையும் மூன்றுபாடலினும் குறிப்பிடவே, மூவேந்தரும் கபிலர்சொல்லையே துணையாகக் கொண்டு வஞ்சித்துப் பாரியைக் கொன்று விட்டார்கள்; பறம்பு மலையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவ்வாறு நிகழ்ந்ததென்பதைப் பாரி மகளிர் பாடிய பாடலில்,

வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டனர் யாம் எந்தையு மிலமே." (புறம்: ௧௧௨)

என வருமடிகள் கொண்டுணரலாம்.

இதுவே புறநானூற்றிலிருந்து பாரியைப் பற்றி அறியும் வரலாறாகும். இவ்வரலாற்றை விரிவாக்கிச் சொற்செறிவும் பொருட்பொலிவும் பொதுள வெண்பா யாப்பினால் சேது சமத்

தான மகாவித்துவான் உயர்திரு. ரா. இராகவையங்கார் அவர்கள், "பாரிகாதை" என்னும் சிறந்த நூலை இயற்றியிருக்கின்றார்கள். அது தமிழ் மக்களுக்கு அமிழ்தென இனிக்கும் இயல்பினது. அந்நூலுக்கு அழகான குறிப்புரையும் அவரே வரைந்துள்ளமை மிகவும் போற்றத் தக்கதாகும்.

அப் பாரி காதையை யான் படித்துச் சுவைத்து மகிழும் வாய்ப்பைப் பெற்றேன். வெண்பாக்களின் அழகிலும் சொன்னயங்களிலும் பொருளாழத்திலும் திளைத்து மகிழ்ந்தேன். ஆயினும், 'புறநானூற்றில் கண்ட வரலாற்று முறைக்குச் சிறிது வேறுபட்டிருக்கின்றதே' என்ற எண்ணம் மாத்திரம் என்னெஞ்சில் இடங்கொண்டே இருந்தது. அச் சிறு வேறுபாடு எது என்பதை இனிக்காண்போம்.

பாரியோடு மூவேந்தர் பொருதற்குரிய காரணம் பாரி கொடைப் புகழால் மூவேந்தரினும் மிக்குத் தோன்றினமையே என்பதை முன்னர்க் கண்டோம். அக் காரணத்தையே ஐயங்கார் அவர்களும் உடன்பட்டுக் கூறுகின்றார்கள். ஆயினும் அதனினும் சிறந்த காரணமாக வேறொன்று புதுவதாகக் கூறியிருக்கின்றார்கள். பாண்டியன் பாரிமகளிரின் அழகின் சிறப்பையும் அறிவின் பெருக்கையும் கேட்டு அவர்பால் மயல் கொண்டான் என்றும், தன் கருத்தைத் தூதுவர்மூலம் பாரிக்குணர்த்தியும் பாரியுடன் படாமை கேட்டுச் சினந்து ஏனை வேந்தரொடு சேர்ந்து கொண்டு பாரியைத் தொலைக்கப் படையொடுவந்து பறம்பு மலையை முற்றுகையிட்டான் என்றும் பாரிகாதையில் கூறியுள்ளமையேயது.

"பாரி னறிஞர்வாய்ப் பாரி மகளிரிருஞ்
சீரினிது கேட்டுமயல் செய்தனனால்—போரி
னிணமாலை சூடு நெடுவேற் செழியன்
மணமாலை சூட மனத்து." (பாரி—௧௬௬)

எனவும்,

"மணம்பேசி னேற்கு மறுத்தில் லறத்தின்
குணம்பேசி விட்ட கொடியோன்—இணங்காற்கு
நூலா னறிவித்தல் நொய்தாகும் என்வெற்றி
வேலா னறிவிப்பேன் வேறு. (பாரி-௨௨௬)

எனவும்,

வரும் வெண்பாக்களால், பாரியொடு மூவேந்தர் போர் செய்யக் காரணம், பாண்டியற்குப் பாரி மகண் மறுத்தமையே என்பது ஐயங்கார் அவர்கள் கருத்தாதல் தெளியலாம். பாரியை வெல்ல

ஏனைவேந்தரும் பாண்டியனோடு சேர்ந்து கொண்டார்கள் என்ற செய்தியை,

"செகத்தாள், குலவேந்தன் மாறன் குறிப்பி னியன்றார்
நிலவேந்தர் பல்லோரும் நேர்ந்து." (உஉஅ)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

பாரியின் உண்மை வரலாற்றையறிதற்குச் சிறந்த மூலமாக வுள்ளவை புறநானூற்றுப் பாடல்களே என்பதை ஐயங்கார் அவர்கள் பாரிகாதை முன்னுரையில் தெளிவு படுத்தியிருக்கின்றார்கள். புறநானூற்றில் பாரியைப் பற்றிய பாடல்கள் 16 உள்ளன. அவற்றுள், எந்தப்பாடலினும் பாண்டியன் பாரிமகளிரை மணக்க விரும்பினான் என்பதற்கோ பாரி தன் மகளிரைக் கொடுக்க மறுத்தான் என்பதற்கோ சான்று காணப்படவில்லை. அங்ஙனமாகவும் இப்புதுக் கருத்தைப் "பாண்டியற்கு மகண் மறுத்த திறம்" என்ற தலைப்பில் 65 பாடல்களால் விரித்துரைப்பதற்குக் காரணம் யாதென்பது ஆராயத்தக்கது.

அளிதோ தானே பாரியது பறம்பே (புறம் : ௧0௯)

என்று தொடங்கும் பாடல் முதலாக மூன்று பாடல்களுக்கும் திணை - நொச்சி. துறை - மகண் மறுத்தல் என எழுதப் பட்டுளது. இதைக் கண்ட ஐயங்கார் அவர்கள் 'மகண் மறுத்தல்' என்பது பாரி, தன் மகளிரைக் கொடுக்க மறுத்ததே என்றும், மூவேந்தருள் பாண்டியனே பாரி மகளிரை மணக்க விரும்பினான் என்றும், மற்றை இருவேந்தரும் பாண்டியற்குத் துணையாக வந்தவர்கள் என்றும் ஊகித்துப் பொருள்கொண்டு தம் புலமைத் திறத்தால் புதுவதோர் கற்பனை செய்து கொண்டு பாரிகாதையில் "பாண்டியற்கு மகண் மறுத்த திறம்" விரித்துரைத்திருக்கின்றார்கள். பாடல்களிலுள்ள பொருளை நோக்காது அப்பாடல்களின் கீழுள்ள துறைப்பொருளையே நோக்கி ஒரு வரலாற்றை நிறுவுவது பொருந்துமா?

புறநானூற்றிற்குத் துறை வகுத்த உரையாசிரியர், புறப்பொருள் வெண்பாமாலையைத் துணைகொண்டு துறை வரைந்துள்ளார் என்பதும், அவர் வரைந்த திணையும் துறையும் அவ்வப் பாடற்கேற்றனவல்ல என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாகும். அவர் கருத்து அன்னதாதல்,—"தத்தம் புது நூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறைகூற வேண்டுமென்றறிக.'' என்று தொல்காப்பியப் புறத்திணையியலில் 'கொடுப்போரேத்தி' என்னும்

சூத்திர வுரையில் அவரெழுதியிருத்தலானும் மேற்கூறிய புறத் திணையியலுரையில் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை வேறு திணை துறைகளுக்கு உதாரணமாகக் காட்டி அவர் மறுத்த லானும் அறியலாம்.

நொச்சித் திணை என்ற திணையும் மகண் மறுத்தல் என்ற துறையும் தொல்காப்பியரால் கூறப்படாதனவே. இக் கருத்தை ஐயங்கார் அவர்களும் விளக்கியிருக்கின்றார்கள். “தொல்காப்பி யனார் நொச்சித்திணை என ஒன்று உடன்படாமையின் அதனுட் டுறையாக ஐயனாரிதனார் கூறிய மகண் மறுத்து மொழிதற்கு அந்நூலுள் இடனே யில்லாமை துணியலாம். மற்றுப் புறப் பாட்டுரையாசிரியர் ஐயனாரிதனார் மதம் பற்றியவர் என்பது (௧௦௯, ௧௦, ௧௧)-ஆம் பாடல்களை நொச்சித் திணையுள் மகண் மறுத்தற்றுறைப்பாடல்களாகக் கூறுதலானறியலாம். நொச்சித் திணையுள் வைத்து மகண் மறுத்தலாக இவர் கூறியது மகண் மறுத்தலே காரணமாகப் போர் நிகழ்கின்ற நிலையில் எயில் காத்தல் பற்றி என்று கொள்ளத்தகும்” என்று பாரிகாதை முகவுரையில் வரைந்திருப்பது காண்க.

இதனால் (௧௦௯, ௧௦, ௧௧) ஆகிய புறப்பாட்டுக்களின் கீழ் வரைந்துள்ள நொச்சித்திணையும் மகண் மறுத்தல் என்னும் துறையும் புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்பற்றி எழுதப் பட்டனவே என்பது ஐயங்கார் அவர்கள் துணிபாதல் பெறப் படும். புறப்பொருள் வெண்பாமாலை யுரையில் “மகட்பாற் காஞ்சி அரசற்குரித்து; மகண் மறுத்து மொழிதல் மறவர்க் குரித்து” என்று விளக்கந்தரப்பட்டுளது. “மகண் மறுத்து மொழிதல் மறவர்க்குரித்து” என்றது, மகண் மறுத்து மொழி தற்குரியோர் மறவர் என்று எளிதில் பொருள் கொள்ளக் கிடக் கவும், ஐயங்கார் அவர்கள், மகண் மறுத்து மொழியப்படுவோர் மறவர் என்று திரியக் கொண்டு தம் முகவுரையில்,—“இவர் மகட் பாற்காஞ்சி எனவும் மகண் மறுத்த லெனவும் துறை கூறிய பாடல்கள் பெரும்பாலும் வேந்தர்க்கு மகண் மறுத்த லாகவே இருத்தல் கண்டுகொள்க.—பாரியைப் பற்றிய பாடல் களில் ‘மூவிரு முற்றினும்’ எனவும், “மூவிருங்கூடியுடன்றனி ராயினும்” எனவும், “வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே” எனவும் வருவனவற்றால் இவை மறவர்க்கு மணமறுத்தலா காமை நோக்கிக் கொள்க.” எனவும், “மகண் மறுத்தல் துறைப் பாடல்கள் மூன்றும் மூவேந்தரையும் நோக்கியனவாக இருத்த லால், புறப்பொருள் வெண்பாமாலை யுரைகாரர், ‘மகண் மறுத் தல் மறவர்க்குரித்து’ என்று கூறியது இயையாமை காண்க.” எனவும் மறுத்துரைத்திருக்கின்றார்கள். அது கிடக்க.

மகண் மறுத்தல் என்னும் துறைப் பொருளையே பொருளாகக் கொண்டு ஐயங்கார் அவர்கள், பாரி, தன் மகளிரைப் பாண்டியற்குக் கொடுக்க மறுத்த செய்தியைக் கூறுவதே (௧0௬, ௧0, ௧௧) அம்மூன்று பாடல்களும் எனக் கருதினரன்றி அத்துறைக்குரிய அப் பாடல்கள் என்ன கூறுகின்றன என்பதை நினைத்துப் பார்த்ததாகவே தோன்றவில்லை. அப் பாடல்கள் மூன்றும்முன்னரே எடுத்துக்காட்டப்பட்டன. அப் பாடல்களுள் மகளிரைக் கொடுக்க மறுத்த செய்தி குறிப்பானும் பெறப்படவில்லை என்பது தெளிவு. "அளிதோ தானே பாரியது பறம்பே" எனவும் "பறம்பு கொளற்கரிது" எனவும், "அளிதோ தானே பேரிருங் குன்றே" எனவும் பறம்பு மலையைக் கொடுக்க மறுத்த செய்தியே கூறப்படுகின்றது என்பதை யாரும் எளிதினுணரலாம். இப்பாடல்களைப்பாடிய கபிலர்க்குப் பாரி மகளிரைப் பாண்டியற்குக் கொடுக்க மறுப்பதே கருத்தாயின் அக்கருத்தை வெளிப்படக் கூறியிருப்பாரன்றோ? இது மறைத்துக்கூறும் மறைபொருளல்லவே. மகட்பாற் காஞ்சித் துறையிலுள்ள இருபத்தொரு பாடல்களில் (௩௩௬-௩௫௬) மகளைக் கொடுக்க அஞ்சி மறுக்குஞ் செய்தி வெளிப்படையாக விரித்துக் கூறப் பட்டுள்ளதே.

'களிறணைப்பக் கலங்கினகா'

என்ற புறப்பாட்டில் (௩௪௫),

"மைய னோக்கிற் றையலை நயந்தோர்
அளியர் தாமே யிவடன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலைய கருங்கடை நெடுவேல்
இன்ன மறவர்த் தாயினு மன்னோ
வென்னா வதுகொல் தானே
பன்னல் வேலியிப் பணைநல் லூரே."

என்ற பாடலை நோக்குக. இதில் ஒரு பெண்ணின் தமையன்மார், தம் தங்கையை விரும்பிவந்த மன்னர்களின் செல்வத்தை மதித்துக் கொடாது அவர்கள் தங் குடிக்கு நிகரல்லோர் என்ற காரணத்தால் அவரொடு போர் செய்யத் துணிந்ததனை வெளிப்படையாகக் கூறியிருத்தல் காண்க. இது போலவே,

"ஏர்பரந்தவய னீர்பரந்த செறுவின்
னென்மலிந்தமனைப் பொன்மலிந்த மறுகிற்

படுவண் டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவேளா தன் போந்தை யன்ன
பெருஞ்சீ ரருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்வண் டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்ன னொருமட மகளே." (புறம்: ௩௩௮)

என வரும் பாடலிலும் வெளிப்படக் கூறியிருத்தல் காண்க. வளம் வாய்ந்த தோட்டினையுடையதாய் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கின்ற கதிர்களையுடைய கழனிகளின் நடுவில் காவலாகப் பொருந்திக் கடலில் போக்கற்றுக் கிடக்கும் கப்பலைபோலத் தோன்றும் ஒரே ஒரு மதிலையுடைய மன்னன், ஏர்கள் பரவியுழும் வயலினையும், நீர் பரவிய ஏரிகளையும், நெல் நிரம்பிய வீடுகளையும் பொன்னிறைந்த தெருக்களையும், வண்டுகள் ஆரவாரிக்கும் பல மலர்களையுடைய சோலையினையுமுடையதாய், நெடு வேளாதன் என்னும் மன்னனுக்குரியதாய போந்தை என்னும் ஊரினை யொத்த பெரிய சிறப்பினையும் அரிய அழகினையுமுடையவளாகிய, தன் ஒப்பற்ற இளமை வாய்ந்த மகளைக், கரிய கிளையினையுடைய வேப்பம் பூவினையும், ஆத்திப் பூவினையும், பனம்பூவினையும் சூடிய தலையினையுடையவர்களும், கையில் தாங்கிய வில்லினையுடையவர்களுமாகிய வெற்றி வாய்ந்த பாண்டியனும் சோழனும் சேரனும் ஆகிய மூவேந்தர் வந்தாலும் அவர்கள், தன்னைத் தகுதியோடு வணங்காராயின் அவர்கள் செல்வத்தையும் வீரத்தையும் மதித்து அவர்க்குக் கொடுக்கமாட்டான் என்பது பொருள்.

ஓரெயின் மன்னன், அருங்கொண்டியளாகிய தன்னொடு மட மகளை வேந்தர்வரினும் வணங்கார்க் கீவனல்லன் என மாறி முடிக்க.

இப் பாடலில், ஒரு சிற்றரசன், 'தான் ஓரெயின் மன்னனாக இருந்தாலும் தன்னொரு மகளைச் செல்வத்தால் வீரத்தால் மிக்கவர்களாகிய மூவேந்தர்களே விரும்பி வந்தாலும் அவர்கள், வணங்கிக் கேளாராயின்—வில் வீரங் காட்டிப் பெறலாமென்று எண்ணுவராயின் அவர்க்கு அஞ்சிக் கொடுக்கமாட்டான்' என வெளிப்படையாகக் கூறியிருத்தல் காண்க.

பாரி மகளிரைப் பாண்டியன் விரும்பி வந்து மற்ற இரு வேந்தரோடு சேர்ந்து படைவலி காட்டிப் பாரியைப் பணிவித்து

அவன் மகளிரைப் பெறப் பறம்பு மலையை முற்றியது உண்மை யாயின், அவ் வடாத செயலைப் பொய்யா நாவிற் கபிலர், மேல் மகட்பாற் காஞ்சித் துறைப்பாடல்களில் கூறியுள்ளதுபோல வெளிப்படையாகவன்றோ கூறியிருப்பார். பாரியின் உயிர் நண்ப ராய்ப் பாரியுடனிருந்து போர் நிகழ்ச்சியை நேரிற் கண்ட கபிலர் அந் நிகழ்ச்சியை ஒரு பாடலிலும் குறிப்பிடாதிருக்கப் பன்னூ றாண்டுகட்குப் பின் வந்தவர், பாண்டியன் பாரி மகளிரை விரும் பியே பாரியொடு போர் செய்தான் என்று எவ்வாறு துணிந்து கூறுவது ?

பாரி மகளிரை விரும்பி அவர்களைப் பெறவேண்டியே பாரி யொடு பாண்டியனும் பிறரும் போர் செய்தார்கள் என்பது உண்மையாயின், மூவேந்தரும் பறம்பு மலையை முற்றியிருந்து பாரியைக் கொன்ற பின் அவ் விரும்பப்பட்ட பாரி மகளிரைப் பாண்டியன் மணஞ் செய்து கொள்ளாது விடுப்பானா ? விடுத்தா னாயின் பன்னூழந்து செய்த போர் பயனில் செயலாகவன்றோ முடியும்? மேலும் பாண்டியன் நேர்மையற்ற நிலையில் பாரிமக ளிரை விரும்பிப் போர் செயத துண்மையாயின் அப் பாரி மக ளிர் பாடிய பாடலில், வேந்தர், தம் பறம்பு மலையைக் கவர்ந்த செய்தியையும் தம் தந்தையாகிய பாரியை யிழந்த நிலையினையும் தெளிவாக எடுத்துரைக்கும் அவர்கள், பாண்டியன் பண்பா டின்றித் தம்மை விரும்பிப் போர் செய்தான் என்ற நிகழ்ச்சி யைக் கூறியிருக்கமாட்டார்களா ? அங்ஙனம் கூறாமையால் மூவேந்தரும் போர் செய்தது பாரி மகளிர் பொருட்டன்று என்பது தெளிவாகின்றது.

"பாரி மாய்ந் தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுது நிற்பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே."　　(புறம் : ௧௧௩)

எனப் பாரியை யிழந்து நின்ற கபிலர் கலங்கிச் செயலற்றுப் பறம்பு நோக்கிப் பாடியபொழுது, மகளிர் கூந்தலைத் தொடுதற் குரிய உரிமையுடைய கணவரைப் பெற வேண்டிச் செல்கின்றேம் என்ற பொருள்படக் கூறியிருத்தலால் பாண்டியன் பாரிமகளிரை மணக்கவில்லை என்பது விளங்கும்.

மகண் மறுத்தல் என்னும் துறைக்குரியவாகக் காட்டப் பட்ட பாடல் மூன்றினும், "அளிதோ தானே பாரியது பறம்பே" "பறம்பு கொளற்கரிதே" "அளிதோ தானே பேரி ருங் குன்றே" எனப் பறம்பு மலை பகைவரால் கொளற்கருமை

யும், "ஆடினிர் பாடினிர் செலின் நாடுங் குன்று மொருங்கீயும்" "நீர் பாடினிர் செலின் யாமும் பாரியு முளமே குன்று முண்டு" "கிணை மகட் கெளிதால் பாடினள் வரினே" என இரவலர்க்குப் பாரி எளியனாய் நின்று யாவும் கொடுக்கும் தன்மையும் கூறி யிருப்பது காண்க.

இவற்றை நோக்கும் பொழுது மூவேந்தர் பாரியோடு போர் செய்தது அவன் மகளிரைப் பெறவன்று என்பதும், பாரியைக் கொன்று பறம்பு மலையைக் கொள்ளவே என்பதும் தெற்றென விளங்கும். இதனாலன்றோ பாரிமகளிர் பாடிய,

> "அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
> எந்தையு முடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
> இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
> வென்றெறி முரசின் வேந்தரெங்
> குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே." (புறம் : ௧௧௨)

என்ற பாடலில், வேந்தர், பறம்பு மலையைக்கைப்பற்றின செய்தி யையும் பாரியைக் கொன்ற செய்தியையும் தவிர வேறொன்றும் கூறாது விடுத்திருக்கின்றார்கள்! பெண்டிரைப் பெற விரும்பிப் போர் செய்தவர்கள் குன்றத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றால் பொருந்துமா?

'பறம்பு கொளற்கரிது' என்ற தொடர் குறிப்பாகப் 'பாரி மகளிர் கொளற்கரியர்' என்பதை யுணர்த்திற்று என்று கூறுவா ருளராயின், அப் பாரி மகளிரே, "வேந்த ரெங்குன்றுங் கொண் டார்" என்று கூறுமிடத்தும் குன்று என்பது குறிப்பாகப் பாரி மகளிரை யுணர்த்திற்று எனல் தகுமோ? மேலும் "கிணைமகட் கெளிதால் பாடினள் வரின்" என்னுமிடத்து வேலினால் பாரியை வென்று அவன் மகளிரைக் கொள்ளுதலரிது; கிணைமகள் பாடிக் கொண்டு வந்தால் அவட்குப் பெற வெளியர் என்று பொருள் பட்டு நகைப்பிற்கிடமாதலறிக. கிணைமகட்கு எளியர் பாரி மக ளிர் என்றால் அக் கிணைமகளன்றோ பாரிமகளிரை மணக்க வேண்டும்?

எனவே, எவ்வகையில் நோக்கினும் 'மகண் மறுத்தல்' என்னும் துறைக்குரிய பாடல்கள் மூன்றனும் பாண்டியற்குப் பாரி மகளிரைக் கொடுக்க மறுத்த செய்தி பெறப்படாமையும் பறம்பு மலையும் நாடும் கொடுக்க மறுத்த செய்தியே கூறப்படு கின்றதென்பதும் எளிதினுணரலாம்.

புறநானூறு, பழந் தமிழர் வரலாற்றை யுள்ளவாறுரைக் கும் சிறந்த நூல் என்பது ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்புக் கொண்ட உண்மை. அந் நூலிலுள்ள பாடல்கள் யாவும் பல

புலவரால் பல காலத்துப் பாடப்பட்டவை. பொய்யாத நாவினையுடைய புலவர்கள், தாம் நேரிற் கண்ட நிகழ்ச்சிகளையும், தாம் ஆராய்ந்து கண்ட முடிபுகளையும் பாடலாக அமைத்து நமக்குத் தந்திருக்கின்றார்கள். அப் பாடல்களில் சிலவற்றிற்குக் கீழ்க் குறிப்புக்கள் காணப்படுகின்றன. "கடந்தடு தானை" என்று தொடங்கும் பாடற்குக் கீழ் "மூவேந்தரும் பறம்பு முற்றியிருந் தாரைக் கபிலர் பாடியது" என்பதுபோல. இத்தகைய வரலாற்றிற்குரிய குறிப்புக்கள், பாடிய புலவராலோ அல்லது அவர் காலத்திருந்து அவ்வரலாற்றை நன்குணர்ந்தவராலோ எழுதப் பட்டிருத்தல் வேண்டும். எனவே, அத்தகைய கீழ்க் குறிப்புகளே வரலாற்றிற்குத் துணையாகக் கொள்ளத்தக்கன. திணையும் துறையும் பிற்காலத்து உரை யெழுதியவரால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இது ஐயங்கார் அவர்கட்கும் உடன்பாடே என்பது முன்னர்க் காட்டப்பட்டது. எனவே, நூல் செய்த காலத்துக்குப் பன்னூறாண்டுகட்குப் பின் தோன்றிய உரையாசிரியர் கூறிய துறைப் பெயரைக் கொண்டு ஒரு வரலாற்றை நிறுவுவது பொருந்துமா என்பது ஆராயத் தக்கது.

ஆயின், உரையாசிரியர் தாம் அத் துறைப் பெயரைச் சிறிதும் இயைபில்லாமல் வரைந்திருப்பாரா? என்ற கேள்வி யெழுதல் இயல்பே. புறநானூற்றுப் பாடல்கள் புலவர் கண்ட முடிவுகளையும் அவ்வக் காலத்து நிகழ்ச்சிகளையுமே யுணர்த்தும் நோக்கத்துடன் பாடப்பட்டவையேயன்றி, இன்ன திணையில் இன்ன துறையில் இப்படிப் பாடவேண்டும் என்று கருதிப் பாடிய புறப்பொருள் வெண்பாமாலை போன்று பாடப்பட்டவையல்ல என்பது நினைவு கூர்தல் வேண்டும். பொய்யில் புலவர் பாடிய பாடல்களை வைத்துக்கொண்டு அவை ஒவ்வொன்றும் என்ன திணையைச் சேர்ந்தது; என்ன துறையைச் சேர்ந்தது என்று எண்ணி ஒவ்வொரு பாடற்கும் திணையும் துறையும் கூறுவது பின் தோன்றிய உரையாசிரியர் செயலாகும். இங்ஙனமன்றிப் பாடிய புலவரே திணையும் துறையும் கூறியிருப்பின், "தூங்குகையா னோங்கு நடைய (புறம். ௨௨) என்று தொடங்கும் பாடற்கு 'அரசவாகை' என்று துறை கூறிவிட்டுப் பின் 'இயன்மொழியுமாம்' என்றாற்போல வேறு துறை கூறுதல் இயலாமை யறிக.

இவ்வாறு முன்னோர் பாடிய பாடற்குத் துறை வகுக்க மேற்கொண்ட புறநானூற்று உரையாசிரியர்; கபிலர் பாடிய அம் மூன்று பாடலையும் எத்துறையில் அடக்கலாம் என்று எண்ணிப்பார்த்து அப்பாடல்கட்குரிய புறத்துறைகள் கிடைக்கப் பெறாமையால் ஒருவகையான ஒற்றுமைநோக்கி மகண் மறுத்தல் என்னுந் துறைப்பாற்படுத்தி யிருக்கவேண்டும். புறப்

பொருள் வெண்பாமாலை ஆசிரியர் 'மகண் மறுத்து மொழிதல்' என்னும் துறைக்கு விளக்கமாக,

"வெம்முரணோன் மகள் வேண்ட
அம்மதிலோர் மறுத்துரைத்தன்று."

என்றும், உதாரணமாக,

"ஒள்வாள் மறவ ருருத்தெழூந் தும்பர்நாள்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்."

என்றும் வரைந்துள்ளார். 'மதிலிலுள்ள ஒள்ளிய வாள் வீரரைக் கோபித்தெழுந்து மேனுள் தேனொழுகும் நறுமாலையையுடையவள் பொருட்டாகக் கொண்டு, கொள்வான் வேண்டி இடையின் யின் அழகைக் கருதி வந்தவருடைய இளைய யானைகளின் கொம்புகள், இந்தக் கறுத்த கண்ணினையுடையாளது வெளுத்த கட்டிலின் கால் ஆயின,' என்பது பொருள்.

இதனால் ஒரு கொடிய வலிய வேந்தன் தன்பகை மன்னனுடைய மகளை விரும்பிக் கேட்க, அம் மன்னன் மதிலிலுள்ள வீரர்கள், 'நமக்கு எளியளல்லள்' என்பதுபட மறுத்துரைப்பதே 'மகண் மறுத்து மொழிதலாகும்' என்பது விளங்கும்.

இப்பாடல் நொச்சித்திணையில் வைத்திருத்தலையும் அப்பாடலின் கருத்தையும் ஊன்றிநோக்கின் வேறுவகையாகப் பொருள் கொள்ளவும் இடம் தருகின்றது. நொச்சி வீரர் தொழில் முற்றுகையிட்ட உழிஞையான் விரும்பிய வண்ணம் மதிலைக் கைக்கொள்ளாதபடி மதிலைக் காத்து நிற்றலே யாதலின் அம் முறையால் இப்பாடற்குப் பொருள் கூறலாம். மதிலை மகளாக்கி, அம்மதிலாகிய மகளை முற்றியிருந்த மன்னன் வேண்ட அம்மதிற்கண் வீரர் கொடுக்க மறுத்தார்கள் என்பதே அப்பொருள். கருங்கண் முதலியன பெண்ணாக மதிலை யுருவகஞ் செய்ததற்கேற்ப வந்த இயற்கையடைகள். மதிலைப் பெண்ணாகக் கூறும் மரபு உண்டு என்பது, 'கருதாதார் மதிற்குமரி மேல்' (பு. வெ. ௧0௭) "வணங்காதார் மதிற்குமரியொடு, மணங்கூடிய மலிபுரைத்தன்று" என்று பிறவிடத்துக் கூறுவது கொண்டுணரலாம். மதிலைக் குமரியாக்கிக் கூறியதேயன்றி அம் மதிலை ஒரு மன்னன், தனக்குரித்தாக்கிக் கொண்டமையை மணங்கூடியதாகக் கூறியிருப்பதும் நோக்குக. மகட்பாற்காஞ்சியில் மகளைக் கொடுக்க மறுக்குஞ்செயல் மன்னனுக்குரியதாகவும் மகண் மறுத்து மொழியுமுரிமை மறவர்க்குரியதாகவும் ஓதப்பட்டிருப்பது இக்கருத்தையே வலியுறுத்தல் காண்க. மதிலாகிய மகளைக் கொடுக்க மறுக்குமுரிமை மறவர்க்குரியதாவது நேர்

மையே யன்றி மன்னவன் மகளைக் கொடுக்க மறுக்குமுரிமை மறவர்க்குரியதாதல் நேரிதாகத் தோன்றுமையும் நோக்குக. மகண்மறுத்து மொழிதல், நொச்சித் திணையதாதலும் இக் கருத்துப்பற்றியே யாம்.

புறநானூற்றுரை யாசிரியர், ஐயனரிதனர் கருத்துணர்ந்து 'மகண் மறுத்து மொழிதல்' என்ற துறைக்குப் பொருள் கொண்டு அத்துறையைக் கபிலர் பாடல்களுக்கு (௧0௯, ௧௧0, ௧௧௧) உரியதாக ஓதி யிருத்தல் வேண்டும். ஒரு மன்னன் மதிலிலுள்ள மறவர் அம் மதிலாகிய மகளை வேண்டிய பகை மன்னனுக்கு மறுத்துரைத்தல் போலவே, பாரியின் நண்பராகிய கபிலர், பாரிக்குரிய பறம்பு நாடாகிய மகளைக்கொள்ளவிரும்பி வந்த மூவேந்தரை நோக்கிக் கொளற்கரிதென மறுத்துரைத் திருத்தலால் அப்பாடல்களுக்குத் திணை, நொச்சி யெனவும் துறை—மகண் மறுத்தல் எனவும் வரைந்திருப்பது பொருத்தமாதல் காண்க.

இனிக், "கடந்தடு தானை" என்று தொடங்கும் பாடற்குக் கீழ்க்குறிப்பாக "மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது" என்றுள்ளது. பாரி மகளிரை விரும்பி மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தது உண்மையாயின் அவ்வின்றியமையாச் செய்தியையும் சேர்த்துப் பாரி மகளிர் காரணமாக மூவேந்தர் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது என்றன்றோ அக் குறிப்பு வரைந்தார் எழுதியிருப்பார்? இன்றியமையாத வரலாற்றுக் குறிப்புகளைப் பலவிடத்தும் எழுதியிருக்கும் அவர் "பாரி மகளிரை விரும்பி" எனச் சேர்த்து அக் குறிப்பு வரையாமை ஒன்றே மூவேந்தர் பாரிமகளிர் காரணமாகப் போர் செய்யவில்லை என்பதற்குத்தக்க சான்றுதல் காண்க.

இது காறும் கூறியவாற்றான் பாரியின் கொடைச் சிறப்பும் அக்கொடைச் சிறப்பே அவனோடு மூவேந்தர் போர்செய்யக் காரணமாக இருந்ததென்பதும், பெருநில முழுதாளும் பெற்றியுடைய பெருவேந்தரைக் காட்டிலும் முந்நூறூர்களை யாளும் சிற்றரசனாகிய வேள் பாரி புகழால் சிறந்தான்—அவன் கொடையாலாய புகழ், நாடு முழுவதும் பரவி யிருந்ததென்றால், அது மூவேந்தர்க்குச் சிறுமை தந்து சினத்தை வளர்த்துப் படையொடுவந்து அப்பாரியொடு பொரச் செய்ததென்பது பொருந்துவதாகும் என்பதும் 'மகண் மறுத்தல்' என்ற துறையையே பொருளாகக்கொண்டு பாரி மகளிர் காரணமாகவே பாரியோடு மூவேந்தர் போர் செய்தார்கள் என்பது உண்மை வரலாற்றோடு மாறுகொள்வதாக உள்ள தென்பதும் விளங்கும்.

வழியனுப்பு வாழ்த்து*

சிதம்பரநா தன்னடியே சிந்திக்கும் திருப்பெற்ற
சிதம்பரநா தப்பெரியீர் ! செந்தமிழின் சுவையுணர்ந்து
பதம்பெறுநல் மாணவர்க்குப் பல்கலைசேர் கழகத்தில்
இதமுடனே பயில்விக்கும் எந்தமிழ்ப்பே ராசிரியீர் ! (க)

ஆங்கிலமும் அருந்தமிழும் ஆய்ந்துணர்நும் பேரறிவின்
ஓங்கியுயர் பயனெய்த உவந்தழைத்தார் உளந்தழைத்தே
ஆங்கிலநாட் டுறைபுலவோர்; அவரழைப்பை எதிரேற்றுப்
பாங்குடனே சென்று தமிழ்ப் பணியாற்றும் பணியேற்றீர் ! (உ)

ஊர்காணப் பேர்காண உவந்தபொருள் தமைக்காணப்
பார்காணப் பறந்திடுவர் பலரிங்கி லாந்தினுக்கே
ஏர்காட்டத் தமிழ்க்கலையின் எழில்காட்ட இலக்கணத்தொல்
சீர்காட்டச் சென்றிட்டார் சிலர்யாரே நுமைப்போல ? (ங)

மகிழ்வுற்றாள் தமிழன்னை மதிப்புற்றார் தமிழ்நாட்டார்
புகழ்பெற்ற சிதம்பரமும் பொருந்துகலைக் கழகமுமே
திகழ்வுற்ற தமிழ்நூல்கள் செருக்குற்றேம் யாங்களெலாம்
இகழ்வற்ற நும்முடைய இங்கிலாந் துச்செலவால். (ச)

மொழிநூல்க ளெனவுலகில் மொழிநூல்க ளனைத்தையுமே
ஒழியாமல் தெரிந்துணர்ந்தே உரைக்கவல உயர்புலவீர் !
மொழிகளிலே இனிமையதும் முந்தியதும் உயர்ந்ததுமாம்
மொழிதமிழே எனத்தேற மொழிந்திடுவீர் இங்கிலாந்தில். (ரு)

தமிழ்நாட்டில் தமிழுயரத் தமிழ்ப்புலவோர் தாமுயர
அமிழ்தனைய திருக்குறளின் அறம்பரவ முயன்றிடுவீர்,
இமிழ்கடலுக் கப்புறத்தும் இணையறுதொல் இலக்கியத்துத்
தமிழ்பரவச் செய்திடுவீர் தமிழ்நாட்டின் தகவுயர. (சு)

கலைமலியும் ஆங்கிலமார் கவினிங்கி லாந்தினுக்குப்
புலவர்கள்தம் முகமாகப் புகுந்துபுகழ் பெறவிரைவீர்,
நிலவணிவோன் நிறையருளால் நினைந்தவெலாம் நிறைவெய்தி
வலனுக நுமக்கென்று வணங்கிவழி விடுக்கின்றேம். (எ)

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர். திரு. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் இங்கிலாந்தின் அழைப்பிற்கு இணங்கிச் சென்றபொழுது அவர் மாணவர், திருப்பதி S.V.O. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள் மகிழ்ந்து பாடியது.

தமிழகத்தில் தமிழ்நிலை

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

(சிலம்பு : உக, பரல் : எ, ௩௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால், அவர்கள் தங்கட்கொரு மொழி உண்டு என்றும், அதன் வாயிலாகத் தங்கள் நாட்டு அரசியல் நடக்குமாயின் அதனால் நாட்டில் நல்வாழ்வும் நல்லறிவும் தோன்றி விளங்கும் என்றும் நினையாராயினர்; ஆங்கில மொழி ஆளப்படும் மக்கட்கும் ஆளும் அரசுக்கும் இடையே இரும்புத்திரையாக இருக்கிறது என்பதை அறியமாட்டா தொழிந்தனர்.

ஒளியைக் கண்டு இருள் அஞ்சுவதுபோல, அறிவைக் கண்டு அறியாமை அஞ்சுவது இயற்கை. அதனால் கல்விக்குக் கல்லாமை அஞ்சியோடுவது அறமாயிற்று. ஆங்கிலக் கல்வி கற்றோர் அரசியலதிகாரிகளாய் ஆங்கில மேலோரின் சிறந்த அடிமைகளாய் ஆட்சிபுரியத் தொடங்கியதும், கல்லாத பொதுமக்கட்கு அவர்கள்பால் அச்சமும் ஒடுக்கமும் உண்டாயின. ஆங்கிலம் கற்றோர் உயர்ந்தோராகவும் அது கல்லாதவர் தாழ்ந்தோராகவும் சமுதாயத்தில் வேறுபாடுகள் தோன்றலாயின. அதனால் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே மனக்கலப்பு இல்லாதொழிந்தது. ஆங்கிலமொழி வாயிலாக வந்த அறிவு, பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களிடையே பரவா தொழிந்தது. அறியாமைக்கு மன்னிப்பு இல்லையாதலால், அறியாமை கொண்ட பொதுமக்கள், ஆங்கில வறிவு கொண்ட அதிகாரிகட்கு அஞ்சி நீங்கி நின்றனர். இதனால் பொதுமக்களிடையே நல்ல கல்வியும் அறிவும் வளர்வதற்கு இடமில்லை யாயிற்று.

இந்த நிலை நல்லறிவு வளர்தற்கு இடம் தராது போயினும் பொதுமக்கள் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பிற்று. ஆங்கிலக் கல்வி, மக்கள் சிலர்க்கு அதிகாரமும் பெரும் பொருளும் தருவதை அவர்கள் கண்டனர். அதனால் அவர்கள் தங்கள் நாட்டு மொழியினும் ஆங்கில மொழியினிடத்தில் பற்றும் நன்மதிப்பும் தர முற்பட்டனர். தங்கள் வயிற்றில் பிறக்கும் மக்களை எவ்வகைத் துன்பப்பட்டேனும் ஆங்கிலக் கல்வியுடையராக்க வேண்டுமென்று முயல்வாராயினர். இம் முயற்சியில் வீடு நிலம் முதலிய பொருள்களை யெல்லாம் விற்று ஆங்கிலம் கற்றவர் மிகப் பலராவர். இந்த வேகத்தில் தமிழ் நாட்டுத் தமிழும், ஆந்திர நாட்டுத் தெலுங்கும் பிறவும் கைவிடப்பட்டன. இத்துறையில் ஏனை ஆந்திரர், கேரளர், வங்காளியர் முதலியோரைக் காட்டி

லும் கண்டோர் இகழத்தக்கநிலையில் தங்கள் மொழியைக் கைவிட்டவர் தமிழர்களே. தமிழர்களுள் பலர் தமிழ் படிப்பதை யும் தமிழில் பேசுவதையும் மானக் குறைவாகவும் இழிநிலையாக வும் கருதினர்; இன்னும் சிலர் கருதிக்கொண்டிருக்கின்றனர்.

தலையில் ஒழுகிய சேறு, உடல் முழுதும் ஒழுகிப் பரவுவது போல, அன்று அரசியல் தலைமை நிலையத்தில் பாய்ந்த ஆங்கிலம், இன்று நாட்டில் தந்தி, தபால், தொழிற்சாலை, மருத்துவச்சாலை, கல்விச் சாலை, வாணிகம், கோயில், புகை வண்டி, மோட்டார் நிலையங்கள் முதலிய எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டது. நாடு நகரங்களிலும், சிற்றூர் பேரூர்களிலும், மூலை முடுக்கு களிலும், பிச்சைக்காரர் வாயிலும், பெருஞ் செல்வப் பெரு மக் கள் வாயிலும் எங்கும் ஆங்கிலம் இடம்பெற்று விட்டது. இன்று மக்கள் நினைக்கும் நெஞ்சிலும், பேசும் வாயிலும் ஆங்கிலம் முன் னணியில் நிற்கிறது என்றால் வேறு கூறுவானேன்?

தமிழ் நாட்டுத் தமிழன் உடலில் தமிழ் நினைக்கும் நெஞ்சில் தமிழ் இல்லை; தமிழ் பேசும் வாயில் தமிழ் இல்லை; தமிழனுடைய அன்றாட வாழ்வில் தொடர்புடைய தொழில், கல்வி, மருத்து வம், போக்கு வரவு முதலிய யாவும் ஆங்கிலமொழி நிலவும் இடங்களாய்விட்டன. இதனால் தமிழனது தமிழ் இருக்குமிடம் தெரியாது ஒடுங்கிவிட்டது. எப்பக்கமும் வேற்றுமொழி வந்து மோதுவதால் தமிழ்வாழ்வு தலை தடுமாறி நிற்கிறது.

இது நிற்க, இந்த ஆங்கில மொழி வரவால் தமிழன் தமிழ் ஒதுக்கப்பட்டதே யன்றித் தமிழருட் சிலரேனும் பயன்பட்ட துண்டோ எனின், பெரும்பயன் பெற்றுள்ளனர் என்பதை எவ ரும் மறுக்கமுடியாது. மக்களாட்சிக்கு இன்றியமையாத அரசியல் உரிமை உணர்வில், சிலர் முன்னேறி யுள்ளனர். சமுதாய வாழ் வில் தக்க மதிப்புப் பெற்றுள்ளனர். பொருள் துறை, தொழில் துறைகளில் ஓரளவு நல்லறிவு பெற்று விளங்குகிறார்கள். தாம் இந்த நாட்டுக்கு உரியவர்; இந்த நாட்டின் நல்வாழ்வில் தமக்கு நல்லதொரு பொறுப்பும் கடமையும் உண்டு என்பதை நன்றாக உணர்ந்துள்ளனர்; விஞ்ஞானம், தத்துவம், வரலாறு, அரசியல் நுட்பம், நீதி முதலிய துறைகளில் சிலர் ஓரளவு உணர்வு பெற் றுப் பிறங்குகின்றார்கள். இந்நிலைக்கெல்லாம் காரணம் ஆங்கிலக் கல்வியின் பெருக்கமே என்று எவரும் நன்கு அறிவர்.

நமது நாட்டில் புகுந்து இருநூறு ஆண்டுகளாகக் கல்விப் பணி புரிந்த மிகச் சிலரே ஆங்கிலத்தால் பயன் பெற்றுள்ளார் கள் என்றால், அதனால் நாட்டுமக்களில் பெரும்பாலார் பயன் பெறாமல் போனதற்குக் காரணம் ஆராய வேண்டியதொன்று.

ஆங்கிலம் கற்றவர் அதனைக் கல்லாத மக்களோடு கலந்துகொள்ளாதவாறு அரசியல் பதவியும் ஊதியமும் தடை செய்து வந்தன. ஆங்கிலக் கல்வி காட்டிய இலக்கியக் காட்சியும் அரசியல் வரலாறு, நீதிநூல் முதலியன காட்டிய காட்சியும் ஆங்கில நாட்டுக் காட்சிகளாய்க் கற்றவருள்ளத்தை அவற்றினிடமே அடிமைப் படுத்தி விட்டன. ஆங்கிலக் கல்வி காட்டும் மக்கள் வாழ்வும் பண்பாடும் ஒழுகலாறும் நம் நாட்டுக்கு உரியவல்ல வாதலால் அவற்றை உள்ளத்தில் வாங்கிக்கொள்ளும் வகையில் செய்த உழைப்பு, நம்மவரை நம் நாட்டு வரலாறு, வாழ்க்கை, பண்பாடு, அரசியல் முதலிய துறைகளை அறவே மறக்கச் செய்தது. நம் நாட்டு மக்கட்கு உணர்த்தக் கூடிய மொழி நமது தமிழ் மொழி; அதனைச் சிறுபோதிலேயே கைவிட்டமையின் ஆங்கிலம் கற்றவர்கள் தாம் கற்றதைப் பிறர்க்கு உரைப்பதற்கு அவரிடம் சொற்கள் இல்லாமல் போய்விட்டன.

இன்று ஆங்கிலம் கற்றவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அறிவுக் கருத்துக்கள் அனைத்தும் ஆங்கிலச் சொற்களாகவேயிருக்கின்றன. ஆங்கிலப் பயிற்சிக்கொப்பாக இன்றேனும் ஒரு சிறிது குறைவாகவேனும் தமிழ்ப் பயிற்சியிருந்திருப்பின், அவர் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் கருத்துக்களுள் பெரும்பான்மையானவற்றை ஆங்கிலம் கல்லாத நாட்டுமக்களுக்கு உணர்த்தி ஆங்கிலக் கல்வியின் பயனை நாட்டில் பரவச் செய்வர். போதிய தமிழ்ப்பயிற்சியின்றி நிறைய ஆங்கிலப் பயிற்சி பெற்றுவரும் தமிழ் மக்கள் பஞ்சியடைத்த குடுக்கைகள் போலப் பிறர்க்குப் பயன்பட வழியின்றித் திகைக்கின்றனர்.

இன்று அறிவுத்துறையில் விஞ்ஞானம், கணிதம், வான நூல், மருத்துவ நூல், மின்சார நூல், தொழில் நுட்ப நூல், அரசியல் தந்திர நூல், உள நூல், தாவர நூல், ஏனை உயிர் நூல் என எண்ணிறந்த நூல்கள் ஆங்கிலத்தில் பெருகி வந்துள்ளன. விவசாய வகையில் எத்தனையோ பல அரிய நூல்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. இவற்றின் கருத்துக்களில் ஒரு சிறிதும் நாட்டுமக்களுக்குத் தெரியாமல் ஆங்கிலமொழியிலே அடைபட்டுக்கிடக்கின்றன. அவையெல்லாம் வெள்ளம்போல் நாட்டுமக்களிடையே பரந்து பாயவேண்டும். நாட்டுமொழிப் பயிற்சியில்லாமையால் நாட்டவர்க்கு அவை பயன்படாது மட்குகின்றன.

இவற்றை நாட்டுமக்களுக்கு உணர்த்தும் பணியைச் செய்யவேண்டுமானால் ஆங்கிலம் கற்றவர்களிடம் உள்ள குறையை நோக்கவேண்டும். அவர்களிடம் தங்கள் கருத்துக்

களைத் தெரிவிப்பதற்கேற்ற தமிழ்ச்சொற்கள் இல்லை; அவை இல்லாமைக்குக் காரணம் அவர்கள் தமிழ்ச்சொற்கள் மிகுதி யாகப் பெறுவதற்கேற்ற பயிற்சியில்லை. சிறு வகுப்பில் கற்ற ஒருசில சொற்களைக்கொண்டு. பல்லாண்டுகளாகப் பேருழைப் புச்செய்து பெற்ற சொற்பொருளை உரைக்கச்சொல்வது இரண்டடி உயரமுள்ள குள்ளனை எட்டடி உயரமுள்ள நெடிய வன் தோள்மேல் கைபோட்டுச் செல்லச்செய்வது போலும் மடமைச் செயலாகும்.

ஆங்கிலமொழிச் சொற்களுக்கு ஒத்த அளவு தமிழில் இல்லாமல் இருக்கலாம். ஆங்கிலச்சொற்களின் தொகைக்கு முக்காற் பங்கு தமிழ்ச்சொற்கள் தமிழில் உண்டு. இவை யாவும் செயலற்று மடிந்து மறைந்துள்ளன. இவை வெளிப் படவேண்டுமானால், அரசியல், வாணிகம், போக்குவரவு, நீதி மன்றம், தபால் முதலிய எல்லாத்துறைகளும் தமிழில் இயங்க வேண்டும்; அப்போது மூலைமுடுக்குகளில் மறைந்துகிடக்கும் தமிழ்ச்சொற்கள் வெளிப்படும்.

அடுத்தபடியாக அரசியல் பணிகளுக்கு ஆங்கிலம் கற்றவர் களை விலக்கி, மிக்க ஊதியம் தந்து நாட்டுமக்களுக்கு ஆங்கிலக் கலையறிவை உணர்த்தும் பணியில் ஈடுபடுத்தி ஊக்கவேண்டும். அரசியல் நிலையங்கள், நீதிமன்றங்கள், மருத்துவ நிலையங்கள், தொழில் நிலையங்கள் ஆகிய எங்கும் தமிழே வழக்குமொழி யாக நிலவப் பண்ணினால் ஒருசில ஆண்டுகளில் கல்வியறிவில் லாத நாட்டுமக்கள் பலர் நல்ல அறிவுடைய மக்களாய் மக்கள் ஆட்சிக்கு மாண்புமிக்க உறுப்பினராய் விளங்குவார்கள். நாடும் நல்வாழ்வுக்குரிய செல்வம் சிறக்கும் திருநாடாகத் திகழும்.

செல்வர்களே !

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

துள்ளிக் குதிக்கு மிளங்கன்று
    தொடர்ந்து பசுவை நெருங்குவபோல்
உள்ளம் கடவுள் திருவடியை
    உந்த வேண்டும் செல்வர்களே !
வள்ளல் தில்லை மன்றில்நடம்
    வழங்கும் எம்மான் அருளொன்றே
தள்ளற் கரிய மணியென்றே
    தலையால் வணங்கி வாழ்வீரே.

தமிழ் புறக்கணிப்பா ?

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தமிழ்மொழி சொல்வளங் குன்றாத் தொன்மொழி; இதன்கண் காலத்துக்கேற்றவாறு புதுச்சொற்களை ஆக்கற்கு வேர்ச் (Root) சொல் உண்டு. இதற்குமுன் இல்லாத புதுப் பொருள் ஒன்று புதிதாகத் தோன்றுமானால், அதற்கு ஏற்ற-தக்க சொல்லை, ஆக்குதல் கூடும். அத்தகைய வளங்குன்றா மாமொழி, எம் சீரியகூரிய செந்தமிழ்.

காட்டாக ரேடியோ, ஏரோப்பிளேன் முதலியன புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள்; இவைகட்கு முறையே வானொலி, வானூர்தி எனக் காரணத்தோடு தமிழ்ச்சொல் ஆக்கினர். பொட்டாட்டோ என ஆங்கிலப் பெயர்பூண்ட கிழங்கு, நம் நாட்டிற்குப் புதுவதாக வந்தது. அதைக்கண்ட தமிழர் ஏனைய கிழங்குகளைப்போல் இருப்பதை அறிந்தனர். அஃதோடு பந்துபோல் உருண்டை வடிவாக இருந்ததனையும் நோக்கினர்; அதற்கு உருளைக்கிழங்கு எனப் பெயரமைத்தனர். இவ்வாறே எந்தப் புத்தம்புதிய பொருள்கட்கும் நம் தமிழில் புதுப் பெயர்களை உண்டாக்கி உலகில் நடமாடவிடலாம். நம்மொழி அதனால் ஆக்கமும் சிறப்பும் எய்தும்.

இவைகளைப் போன்றே தற்காலம் தமிழே ஆட்சிமொழியாகக் கொணரவேண்டுமென்று அவாக்கொண்டுள்ள மக்கள் எண்ணம் ஈடேறும் வண்ணம் ஆட்சிச்சொற் (அரசியல் முறைகட்கேற்ற சொல்)களைத் தமிழில் எளிதில் படைக்க ஒல்லும். அதில் எத்தகைய வருத்தமுமில்லை; படித்த-ஆங்கிலங்கற்ற கூட்டம், தமிழ் ஆட்சிமொழியாக வரவிட்டுவிட்டால் தம் பிழைப்பில் மண் விழுமேயென்று தன்னலங்கருதி முட்டுக் கட்டை போட்டுக்கொண்டு வருகின்றது. இதனைக் கருதியே முற்றத்துறந்த முனிவரராகிய தாயுமான அடிகள்கூடக்,

‘ கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்றுமறி வில்லாத என்
கன்மத்தை என் சொல்வேன் ’

என்று கற்றவர் தவற்றினைத் தம்மீது ஏற்றிக் கூறினார்.

இவ்வுண்மையை, சில திங்கட்குமுன் ஒரு கூட்டத்தில் பேசும்போது நம் சென்னை மாநில முதலமைச்சர் காமராசரவர்கள் நன்கு விளக்கிப் பேசினார்கள். அதற்கு ஆங்கில இந்துத் தாள் தன் தலைப்பில் கனன்று சீறியது தமிழகம் அறியும்.

அண்மையில் நிகழ்ந்த சென்னைச் சட்ட அவைக்கூட்டத்தில் திரு. வி. வி. இராமசாமி அவர்கள் கேள்வி கேட்டபோது அமைச்சர் மறுமொழி கூறுங்கால், 'தாய்மொழியே அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை' யென்றும், 'ஆனால் எப்போது எப்படி என்று பார்த்துச் செய்ய வேண்டு' மென்றும், 'இதைக்குறித்துப் பேசவேண்டாமென்பதுவே அரசினர் வேண்டுகோள்', என்றும் கூறினர்.

நம்நாடு விடுதலை பெற்றதும், அவ்வம் மாநிலத்திலுள்ள மொழி வழியாக மாகாணம் பிரிக்கப்படுமென்றும், அதன் வழியாகவே அரசியல் நடைபெறுமென்றும் காங்கிரசுத் திட்டமும் காந்தியடிகளின் கொள்கையும், ஏற்கனவே உள்ளது. அது ஏட்டளவில் - சொல்லளவில் - நிற்கின்றது. செயலளவில் வேற்றுமொழிகளுக்கே ஆட்சியும் ஆக்கமும் மறைமுகமாகக் கொடுக்கப் பெறுகின்றன. ஆந்திரம் நம் தமிழகத்தோடு இணைந்திருந்தது. மொழிப்பற்றின் காரணமாக நம்மை விட்டுச் சென்று தனி மாநிலமாகப் பிரிந்து தனக்கென முழு ஆட்சியையும் கொண்டு தம் மொழியாகிய தெலுங்கு மொழியிலேயே எல்லாவகையான நடவடிக்கைகளும் செய்துகொண்டு வருகின்றது. அதனால் நாளுக்குநாள் எழுச்சியும் சிறப்பும் மிகுந்துகொண்டு வருதலை யாவரும் அறிவோம். தன் மொழியில் பலவும் நடத்துவதால் அதனால் எந்தச் செயல்களும் அங்கு நின்றுவிடவில்லை, இங்கேதான் எதற்கும் எதிர்ப்பு புல்லுருவிகளால்.

தமிழ்நாடு என்று கூறக்கூட வாய் கூசி 'எஞ்சிய சென்னை மாகாணம்' என்று கூறும் குழுவினரால் ஒருபோதும் தமிழ் மொழி ஆட்சிமொழியாக வரப்போவதில்லை. அதற்கு மாறாக வேற்றுமொழி, கலை, நாகரிகத்தையே தமதாகக்கொண்டு தமிழ் நாட்டில் பரப்ப முற்படுவர். இவர்கள் இருந்தென்! ஒழிந்தென்!

ஆகவே, தமிழகம் தனி நாடாகப் பிரிந்தாலன்றித் தமிழ் மொழிக்கோ கலைக்கோ நாகரிகத்துக்கோ பண்புக்கோ வளர்ச்சியில்லை. ஆட்சி பீடங்களில் அமர்ந்துகொண்டு தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்கத் திட்டமில்லையெனின் இவர்களால் நாட்டுக்குச் செய்யப்போகும் நன்மையென்னையோ? 'துஞ்சாக்கண்ண வடபுலத்தரசே' என்றிருந்த நிலை இன்று மாறி, வடவரின் கீழ் அடிமையாக வாழ்வதில் என்ன நலனிருக்கிறதென்பதை அமைச்சர்கள் எண்ணிப்பார்த்தல் சாலும்!

ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு என்ன நலனிருக்கின்றது? வடநாட்டில் பல கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து யாற்றின் அணைக்கட்டுகள் கட்டி நீரைத்

தலைத்து விளைவைப் பெருக்குகின்றனர். இங்கே காவிரிக்கு என்ன திட்டமிட்டுள்ளனர்; வையைக்கு என்ன வாய்ப்பு; பொருநைக்கு என்ன பொருத்தம்; ஒன்றுமில்லை. மழையும் பெய்யாது, அதை அணைகோலித் தடுக்கவும் திட்டமில்லை, எல்லாம் வடக்கே.

உலக வழக்கில் செத்துப்போய் ஏட்டளவில் நிற்கும் வடமொழியை ஒரு தனிக் கூட்டம், ஆட்சிமொழியாக்க மடிதற்று நிற்கின்றது. அதைக் கண்டும் கேட்டும் மானங்கெட்ட தமிழர், தமிழ் ஆட்சிமொழியாகக் கூடாதெனத் தடங்கல் செய்யும் ஒரு சாரார்க்குத் துணைநிற்கின்றனர். தமிழன் பண்பாடென்பதெல்லாம் பெயரளவில் ஏடுகளில் இருக்கின்றது. முன்பு மேலைநாட்டானுக்குத் தமிழகம் அடிமையாக இருந்தது. இன்று, வடநாட்டானுக்கு மீளா அடிமையாகக்கிடக்கின்றது.

வடநாட்டு அகதிகளெனப்படுவோர்க்கு மாடமாளிகைகளில் குடியிருந்து இன்பமாக வாழ இடனுண்டு. தமிழ்நாட்டு அகதிகட்கு இருக்க, நிற்கக்கூட இடனில்லை. தெருக்களில் அங்கண நீர் (சாக்கடை) செல்லுமிடங்களில் பிள்ளைகுட்டிகளுடன் வெயிலில் காய்ந்தும் பனியில் நடுங்கியும் மழையில் நனைந்தும் காலந்தள்ளுகின்றனர். வாயில்லாப் பூச்சிகளாகிய இவர்கள் தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்த குற்றத்துக்காக இந்த நிலை. வடவராகப் பிறந்த சிறப்பினால் நாடு விட்டு நாடான மொழிபெயர் தேயத்திலும் செல்வாக்கு; சிறப்பு. இதைக்கேட்டால் குறுகிய மனப்பான்மையுடையவன்; நாட்டைத்துண்டாடுகின்றவன் என்று தூற்றப்படுகின்றது; கேட்டால் குற்றம்; கேட்காதிருக்க நடுநிலை நெஞ்சம் ஒருப்படுகின்றிலது.

தமிழ் ஆட்சிமொழியாவதில் தடையில்லையென்று வாயளவில் சொல்லிக் காற்றில் பறக்கவிட்டு விட்டால் தமிழ் தானாகவே ஆட்சிமொழியாக வந்துவிடுமா?

சமக்கிருதத்தின் நிழலான இந்தி எந்தச் சிறப்பைக் கொண்டு இன்று ஆட்சிமொழியாக இருக்கின்றது, அதிலுள்ள எழுத்துப் பெருக்கங்களும், காலும் கோடும் கோல்கள்போல் தோன்றுத் தன்மையாக இருக்கின்ற காரணத்தால் ஆட்சிமொழியாக்கப் பெற்றதா? என்னையோ? இல்லை, இல்லை. ஆட்சித் தருக்கினால்.

‘வானம் பொழியுது மண்ணில் விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி’ என்று அன்று ஆட்சிக்குக் கால்கொள்ள நின்ற வெள்ளையரை உறுமினான் வீரபாண்டியக் கட்டபொம்மு.

இன்று ஆட்சிமொழியாகத் தமிழ் தகுதியில்லையென்று சொல்வார்கட்கு இங்கு என்ன இருப்பு என்றே கேட்கின்றேம்; அவர்கள் வடநாட்டுக்குத் தென்னுட்டு அகதியென்று செல்வார்களாக, அங்கே என்ன நிகழுமென்பதை அறிவர்.

ஆகவே, இந்த வெட்கக்கேடான நிலையைவிட்டுவிட்டுத் தமிழை ஆட்சிமொழியாக்கி, வேற்று மொழியை அகற்றி நம் நாட்டை வடநாட்டுப் பிடிப்பினின்றும் விடுவித்துத் தன்னுரிமை நாடாக ஆக்கக் கிளர்ச்சி செய்யுமாறு தமிழ் மக்களைப் பெரிதும் வேண்டுகின்றேம். தமிழைப் புறக்கணிப்பது கூடாதெனக் கூறி அறிவுறுத்தவும் பெரிதும் கேட்டுக்கொள்கின்றேம்.

'காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்.'

தமிழ் ஆட்சிமொழியாக விரைவில் வருக; ஒளிர்க; ஓங்குவதாக.

எண்ணிப் பார்மின் !

[நாகை, திரு. த. சி. வேலன்]

எண்ணிப் பார்மின் ! எண்ணிப் பார்மின் !
இந்நாள் காறும் இனியநந் தமிழ்மொழி
ஏனே ஏற்றம் பெறவிலை என்பதை
எண்ணிப் பார்மின் ! எண்ணிப் பார்மின் !
இதற்கோர் காரணம் இருந்திடல் வேண்டும்
எனஆய்ந் திடிலோர் உண்மை விளங்கும்
இல்லை நம்மிடம் ஏற்புடைக் கொள்கை
இல்லை நமக்கோர் ஒருமை உள்ளம்
இல்லை நமக்குத் தமிழகம் தந்த
தொன்மைச் சிறப்பும் தூய உள்ளமும்
என்றுநாம் தமிழராய் வாழ்வதோ அன்றே
எய்திடும் தமிழுக் கேற்றம் அறிமினே.

வள்ளுவர் வழிவந்த வள்ளல்

[திரு. பி. எல். சாமி பி. எல். ஸி.]

வள்ளுவர் வகுத்த வழிவந்த வள்ளல்கள் பலர். அத்தகைய வள்ளல்களில் ஒருவர் 1952-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஆல்பர்ட் சுவீட்சர். தற்கால "வள்ளல்கள்" வலக் கையால் கொடுக்கும்போதே இடக் கையால் விளம்பரப் படுத்துவர். ஆனல் இவர் வலக்கை செய்தது இடக்கை அறியாது. பொருளை அள்ளிஅள்ளித் தருவர். ஆனல் அன்பையும் அருளையும் வாரிவாரி இறைக்கும் வள்ளல்கள் ஒருசிலர். அவர்களில் ஒருவர் ஆல்பர்ட் சுவீட்சர். வள்ளுவர் வகுத்த வழியில் வாழும் இவர் வள்ளுவரை வானளாவிப் போற்றி எழுதியிருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் திருக்குறளை வாழ்ந்து காட்டுபவர் இவர்.

இவர் சுவிஸ் இனத்தவர். 1875-இல் பிரான்ஸில் அல்சாஸ் என்ற இடத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளைக் கற்ருர். இசை, மதம், தத்துவம் ஆகிய துறைகளில் கற்று டாக்டர் முதலிய பட்டங்கள் வாங்கினர். மனிதருக்குத் துன்பத்தைக் குறைப்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட இவர், மருத்துவத்துறையில் நுழைந்ததில் வியப்பில்லை. அதிலும் பட்டங்கள் பெற்ருர். பெற்ற பட்டங்களை நெற்றியில் ஒட்டிக் காட்டித் திரியவில்லை. ஆப்பிரிக்காவுக்குச் சென்று பள்ளிகள் கட்டினர்; மருத்துவ நிலையங்கள் நிறுவினர்; பிரான்சில் கிடைத்த பணத்தை ஆப்பிரிக்கருக்குச் செலவழித்தார்; ஆப்பிரிக்காவிற்கு சென்றதற்கு அவர் கூறிய காரணம் உன்னிப் பார்க்கத்தக்கது. ஏனெனில், வெள்ளையர்கள், உலகில் உள்ள கருப்பர்களைத் தங்களின் "தாங்கமுடியாத பளு" என்று சொல்லிக்கொண்டு கருப்பர்கள் மேலேயே குதிரை யேறுவர். கருப்பர்கள் தாங்குவார்கள். "தாங்குகிறோம் நாங்கள்" என்பார்கள் வெள்ளையர்கள்! அத்தகைய ஆப்பிரிக்கனின் துன்பச் சுமையைத் தூக்கிக் குறைப்பதற்குச் சென்ருர் இவர். "ஆப்பிரிக்காவில்தான் துன்பச் சுமை நிறைய உள்ளது. ஆதலின் அங்கே செல்லுகிறேன்" என்று சொல்லி மனிதரையே கொன்று தின்னும் மனிதரிடைச் சென்று மருத்துவம் செய்தார். துன்பத்தைத் துடைத்தார்; அறியாமையை அகற்றினர்; நாற்பது ஆண்டுகளாக உழைக்கிருர். உழைத்துக்கொண்டே யிருப்பாராம், உடல் ஓடாகும் வரை. இலையைக் கிள்ளுவது கொலை, பூவைப் பறிப்பது பாவம்,

எறும்பை நசுக்குவது பெரும்பழி என்ற உயரிய கொள்கைப்படி நடப்பவர். ஊசிமருந்து ஏற்றும்போதே நோய்தரும் உயிர்கள் மடிகின்றனவே என்று வருந்துவாராம்! உலகில் ஒவ்வொரு வரும் ஒரு சிறிதாவது துன்பத்தைக் குறைக்க முயலவேண்டும் என்பதே அவர் வேண்டுவது. "துன்பம் துடைப்போம் சேர வாரும் செகத்தீரே" என்று அவர் அழைக்கிறார். முதியவராய் விட்டார். பல நூற்றுக்கணக்கான அறுவை மருத்துவம் (Surgery) செய்த கைகள் சோர்வுற்றாலும், பிற மருத்துவர்கள் அறுவை செய்யும்போது அருகிலேயே இருப்பாராம். அவரைப் பார்க்கப் பல கல் தொலைவில் இருந்து மக்கள் வருவார்களாம். அவருடைய சிறந்த நண்பர்களில் ஒருவர் ஆப்பிரிக்கர். இந்த உழைப்பிற் கிடையிலும், அவர் பல புத்தகங்கள் எழுதியுள்ளார். இசை, மதம், தத்துவம் ஆகிய துறைகளில் இவர் எழுதிய புத்தகங்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அந்த நூல்களில் ஒன்றான 'Indian Philosophy and its devolopment' என்ற நூலில் திருக்குறளைப்பற்றி எழுதியுள் ளார். இப் புத்தகம் ஜெர்மன் மொழியில் இயற்றப் பட்டது.

சிறிது காலமாக மேல்நாட்டு அறிஞர்கள், தங்கள் கண் களைக் கீழ் நாட்டு நூல்களில் திருப்பியுள்ளனர். ஆல்டுவஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) கிறிஸ்டோபர் பிரை (Sir Chris Topher Fry) டி. எஸ். எலியட் (T. S. Eliot) ஆகிய சில அறிஞர்கள், கீழ் நாட்டு அற நூல்களைப் படித்துப் பயன் பெற் றனர். ஆனால், கீழ்த்திசையில் கலங்கரை விளக்கமாக இருந்த திருக்குறள் அவர்கள் கண்ணோட்டத்தில் படவில்லை. கார ணம், விளம்பரமில்லை. திரை மூடியிருக்கிறது. அந்தத் திரை யைத் திறக்கும் வேலையை ஆல்பெர்ட் சுவீட்சர் நன்றாகச் செய்துள்ளார். முகிலைக் கிழித்தெழும் முழுமதி என்று பல ரும் அறியச் செய்தார். ஆல்பர்ட் சுவீட்சர் கண்ட குறளோ இரண்டாந்தர ஜெர்மன் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பில் குறள் பல இடங்களில் முடம்பட்டது. ஆயினும் அந்த மொழி பெயர்ப்பிலும் கண்டுகொண்டார், குறள் பாறையில் புதைந் துள்ள பத்தரைமாற்றுப் பொன் என்று! கீதையையும், மனு வையும் ஒப்பிட்டுப் பார்த்தார். வேற்றுமைக்கு விளக்கம் தந் தார். மொழிபெயர்ப்பில் முடம்பட்டிருந்த குறள் புடம் பெற்று ஒளிர்ந்தது, அவருடைய விளக்கத்தில்.

குறளில் இருக்கும் கருத்துடன் மிகச் சிறிது ஒத்துக் காணப்படுவது எதோ, அதை மனுஸ்மிருதியிலும், உபநிடதத் திலும், தேடித் துருவிக் கட்டிப் பிடித்துக் கொண்டுவந்து, "இதோ பாருங்கள், இக்குறள் மனுவின் நிழல், இஃது உப

நிடதத்தின் நிழற்படம், அது கீதையின் சாயை" என்று காட்டுகின்றனர் தமிழ்நாட்டில் சில அறிஞர்கள். இந்தப் "பல கண்காட்சிகளை"ப் பார்த்துவிட்டு ஆல்பர்ட் சுவீட்சர் காட்டும் குறள்தரும் காட்சியைக் காணுங்கால், நாம் மலைத்துவிடுகிறோம். ஜி யூ. போப் முதலிய அறிஞர்கள் குறளுக்கும், வட நூற்களில் உள்ள அறவுரைகட்கும் உள்ள வேற்றுமையைப் பல இடங்களில் காட்டியுள்ளனர். அந்த வேற்றுமைகளை விளக்கமாக வலியுறுத்திக் கூறியுள்ளார் டாக்டர் ஆல்பர்ட் சுவீட்சர். குறளின் கருத்துக்கள் புத்தரின் கொள்கையை விட, உபநிடதத்தின் 'உபதேசத்தை'விட, கீதையின் கருத்தைவிடச் சிறந்தது என்பதைச் சில இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். கீழே அவருடைய சில கருத்துக்கள் காட்டப்படும்.

'வரும் பயனை எதிர்பார்த்து அறம்செயயலாம்' என்ற மனுவின் கருத்தைவிடப் பயன் கருதாது 'அறம் செய்க' என்ற குறளின் கருத்துச் சிறந்தது என்று கூறியுள்ளார். 'குறி யெதிர்ப்புக் கூடாது' என்றே குறள் கூறுகிறது. உலகம் மாயை என்று பேசி வந்த பிராமணீயம், பௌத்தக் கொள்கையைவிட 'உலகம் உண்மை; இன்பம் இயல்பு' என்று கூறும் காமத்துப்பால் சிறந்தது என்கிறார். மற்றொரு இடத்தில் குறள், 'தொழிலால் மனிதன் உயர்வடைகிறான்' என்று கூறுகிறது. ஆனால் வட நூற்களோ பிறப்பால் உயர்வடைகின்றான் என்று கூறுகின்றன என்பதையும் எடுத்துக் காட்டுகிறார். மற்றும் அன்பு, அருள், நட்பு முதலிய இயல்களில் வரும் குறள்களை எடுத்துக்காட்டி, அவைகளின் சிறப்பைப் போற்றியுள்ளார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
　அற்றே தவத்திற் குரு"

என்ற குறளின்படி தனக்குற்ற நோயைத் தாங்கி, பிறர்க்குற்ற நோயைப் போக்கி, யாதொரு உயிர்க்கும் உறுகண் செய்யாமல் வாழும் இப்பெரியார், இப்பொழுது எண்பதாவது ஆண்டை எய்தியுள்ளார். ஆனால் இன்றும் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கருதி, ஆப்பிரிக்காவில் தொண்டு செய்கிறார். இத்தகைய பெரியார், வள்ளல், வள்ளுவர் குறளைப்பற்றிக் கூறியுள்ளதை எல்லோரும் மனத்திலிருத்த வேண்டும்.

"உலக இலக்கியங்களில் இத்தகைய உயர்ந்த அறிவுரை தாங்கிய அறநூல் அருமையிலும் அருமை."

—டாக்டர் ஆல்பெர்ட் சுவீட்சர்.

வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

[தமிழ் மறைக் கழகத் தலைவர். திரு. கா. பொ. இரத்தினம்]

ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுக:

சென்ற இரண்டு ஆண்டுகளிலும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகத் தமிழினைப் பேசும் மக்கள் வாழும் இடங்கள் எங்கும் கொண்டாடச் செய்தோம். ஐம்பதுக்கு மேற் பட்ட பத்திரிகைகளும், நூற்றுக்கணக்கான சங்கங்களும், திருச்சி, சென்னை, கொழும்பு, சிங்கப்பூர் வானொலி நிலையங்களும் எமது கழகத்தின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின; சாதிமத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றித் தமிழ்ப் பெரு மக்கள் பலர் ஆதரவளித்தனர்.

1. பத்திரிகைகளும், சங்கங்கள், கல்விச் சாலைகள் முதலிய பொது நிலையங்களும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுமாறு வற்புறுத்திக் கூறிக் கொண்டாடச் செய்தல். [இத் திருநாளுடன் சில நாட்களையும் சேர்த்து வள்ளுவர் வாரமாகவுங் கொண்டாடலாம்.]

2. பத்திரிகைகள் யாவும் திருவள்ளுவர் திருநாள்மலர் வெளி யிடுதல்.

3. சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், கல்விச்சாலைகள் முதலியன திருவள்ளுவர் திருநாளன்று பெரும் விழாக்களை நடத்தல்.

4. வள்ளுவர் திருநாளாகிய வைகாசி அனுடத்தை அரசினர் விடுமுறை நாளாக்குவித்தல்.

5. நாட்குறிப்பு, நாட்காட்டி, பஞ்சாங்கம் முதலியன வெளியிடுவோர், இவற்றிலே வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஆண்டுதோறும் குறித்தல்.

6. யாவரும் திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்குதல் முதலியனவாம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) எல்லா மொழிகட்கும் ஒருவகை எழுத்து

பஞ்சாபி தர்பார் ஆண்டுவிழா, மூன்று நாட்கள் 27—3—55 முதல் நிகழ்வுற்றது. அதற்கு இந்தியநாட்டு இணைப்பு அமைச்சர் சகசீவன் ராம் தலைமை தாங்கினார். அவர் அதுகாலை, 'இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளும் மொழிகள் வளர்ச்சிக்கும், நாட்டின் பண்பாட்டுக்கும் ஒரு பொதுவான எழுத்தை ஏற்பது முதன்மையானது; பஞ்சாபி மொழியை இந்த நாட்டில் வளர்க்கப் பெப்சு அரசினர் கைக்கொண்டுள்ளனர்; அதனை மிகவும் பாராட்டுகின்றேன். ஆனாலும் ஒரு பொதுவான எழுத்து இருக்கவேண்டுமென்று நான் கொண்டுள்ள கொள்கைகளைப் பஞ்சாபி எழுத்தாளர்களை எண்ணிப்பார்க்குமாறு வேண்டுகின்றேன்.

இந்திய மொழிகள் யாவும் சமக்கிருதத்திலிருந்தே உண்டானதாகையால் இது செய்வது எளிதெனவும் கருதுகின்றேன். அரசியல் மொழிக்கும் மாகாண மொழிகட்கும் போட்டியோ முரண்பாடோ இருக்கத் தேவையில்லை என்றார்.

குறிப்பு : திரு. சகசீவன்ராம் கூறுவதுபோன்று சமக்கிருதமே எல்லாவற்றிற்கும் அடிப்படையான மொழி என்றால் அது நாட்டு வழக்கத்தில் இறந்து ஏட்டளவில் நிற்பானேன்? அமைச்சர்களும் அவரை ஒட்டியவர்களும் செத்த மொழியை வழக்கிற்கொணர நினைப்பது பெரியதோர் அறியாமையாகும். சமக்கிருத 'லிபி' எண்ணிலடங்காதன; அவைகளை அடிமை மாநில மொழிகளில் திணிப்பானேன். எனவே, பயனற்ற இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவதைவிட நாட்டுக்கு ஆக்கந்தரும் வேலையில் சகசீவனார் முயலல் மிக நலனெனக் கூற விழைகின்றோம்.

(உ) சமக்கிருதத்தை ஆட்சிமொழியாக்கக் கனவு

தில்லி பாரதீய சாகித்திய சம்மேளனக் குழுவினர் சமக்கிருதத்தை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று கோரி 27—3—55-இல் ஒரு முடிபு கொண்டுவந்துள்ளனர்.

ஆசிரியர் மாதவாச்சாரியா என்பார், இதனைக் கொண்டுவந்து நிறைவேற்றி எல்லா மாகாண மொழிகளும் தங்கள் வளர்ச்சிக்குச் சமக்கிருதத்தையே நம்பியுள்ளனவென்றும், சமக்கிருதத்தை எல்லா மாநிலங்களும் ஏற்றால் நாட்டு ஒற்றுமை நிலைக்குமென்றுங் கூறினார். இதனை ஆசிரியர் எஸ். பி. வாகோர் வழிமொழிந்தார். நாட்டின் முடிவான குறிக்கோள் சமக்கிருதத்தை ஆட்சிமொழியாக்குவதென மகாமகோபாத்தியாய கிர்தர் சாத்திரி சர்மா ஒரு தீர்மானங் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

குறிப்பு : அமெரிக்கா, உருசியா போன்ற முற்போக்கான நாடுகள், மனிதன் ஏன் பிறக்கின்றான்? ஏன் இறக்கின்றான்? முதுமை ஏன் வருகின்றது என்பன போன்றவற்றை எண்ணி ஆய்ந்து அதற்கு முடிபுகண்டு இறப்பைத் தடுக்க வழிகோலி நிற்கின்றன. நம் இந்திய நாட்டில் செத்துப்போன மொழிக்கு உயிர் கொடுப்பதிலும் அவைகளை

வளர்த்து உலகமொழிகளில் உயர்ந்ததாகக்கொள்ள வைத்தலுமாகிய பயனற்ற வழிகளிலேயே காலத்தை வீணாக்குகின்றனர். எந்த நாட்டிலாவது எங்காவது சமக்கிருதத்தில் பேசுவதாகவோ? எழுதுவதாகவோ வரலாறு கேட்டதுண்டோ? நடமாட்டமில்லா மொழி எவ்வாறு வளரும். இச்சாத்திரியர்கள் எண்ணிப்பார்த்து நடமாடும் மொழிகட்குத் தாம் வாழும் தம்மை வாழ வைக்கும் மொழிகட்கே ஆவன புரிவது அறிவுடைமையாகும்.

(௩) குன்றக்குடி அடிகளார் சென்னை வருகை

மலேயா முதலிய கடல்கடந்த நாடுகளில் சுற்றுச் செலவை முடித்துக்கொண்டு 25-3-55 இல்-குன்றக்குடி சிவத்திரு. அருணாசல தேசிக பரமாசாரிய அடிகளார் வந்து சேர்ந்தருளினார்கள். அவர்கட்குச் சென்னை சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் வரவேற்பு நிகழ்ந்தது.

அவ்வரவேற்பின்போது அடிகளார் தாம் மலேயா இந்தோனேசியா முதலிய நாடுகளில் கண்ட நம் தமிழ்நாட்டுக் கலைப்பண்பினையும் சிவபெருமான், திருமால், பிள்ளையார், முருகப் பெருமான் முதலிய கடவுளர்கட்குத் திருக்கோவில்அமைத்து வழிபட்ட சிறப்பையும், பழங்காலந்தொட்டே உள்ளன வென்று பாராட்டிப் பேசியருளினார்கள்.

குறிப்பு: அடிகளார் தம் உடற் செம்மையையும் தற்பெருமையையும் பொருட்டாகக் கொள்ளாது ‘என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்னும் பெரியார் திருமொழிக்கு இலக்காக வெளியுலகில் வந்து தொண்டு செய்வது தமிழுலகிற்கும், சைவவுலகிற்கும் பெருமையளிப்பதாகும். அடிகளாரின் இம்மாபெருந் தொண்டுக்கு மகிழ்ந்து அடிகளாரின் பொன்னடிகள் பன்னெடுங்காலம் இந் நிலவுலகில் நின்று நிலவி யொளிர இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மதிப்புரை

(௧) கொங்கு நாட்டு வரலாறு

[இதன் ஆசிரியர், கோவைகிழார், திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக சரித்திர வெளியீடு. இதன் விலை ரூபா. 3-0-0. கிடைக்குமிடம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.]

ஆசிரியர் பன்மொழிப்புலவர், வரலாற்று நூற்றிறலர்; பன்னூல் ஆசிரியர்: கல்வெட்டாராய்ச்சிக்கலை வல்லுநர் நுண்ணுணர்வினர். எளிமையும் இனிமையும் பொதுள எழுதும் மாண்பினர்.

இந்நூல் இரண்டு பகுதிகளை உடையது. எண்பத்திரண்டு உட்பிரிவுகளையுடையது. நானூற்று நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்களையுடையது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் இன்றுகாறுமுள்ள கொங்குநாட்டு வரலாறு தக்க சான்றுகளுடன் கற்பார்களிந்துருகுமாறு இதன்கண் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பெயரளவில் கொங்கு நாட்டு வரலாறு என்று பொறிக்கப்பட்டிருப்பினும் பொதுவாக இந்திய நாட்டு வரலாற்றுக்குறிப்பும், சிறப்பாகத் தமிழ்நாட்டின் சங்ககாலந் தொட்டுள்ள முழுவரலாறும், ஆட்சி முறைகளும், அயல்நாட்டுத்

தொடர்பும் வணிகமும், கடல்கடந்து நிகழ்ந்த பெருவணிகமும் கொடுங்கோலர் படுத்திய பாடும், அவர்கள் பட்ட பாடுகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. கால ஆராய்ச்சி முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. நாட்டெல்லைப் படங்கள் திருக்கோவில், திருவுருவம், கோபுரம், மண்டபம், மன்றம், மன்னர் முதலிய பல்வேறுபடங்களை வழுவழுப்பான கடிதத்தினில் அச்சிட்டு ஆங்காங்கே பொருத்தமான பக்கங்களில் இணைத்துள்ளமை பெரிதும் போற்றத்தக்கது. நாகரிகம், மொழியாராய்ச்சி, பண்பாடு முதலியனவும் பரக்கக் காணலாம். இந்நூல் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இன்றியமையாக் கருவூலமாகும். தமிழ்நாட்டின் விரிந்த வரலாறு எழுதுவோர்க்குப் பெருந்துணை அடிப்படைப் பெருநூலாகும். தமிழ்நாட்டோடு தொடர்புள்ள மேலைநாடு கீழைநாடுகளின் வரலாறுகளும் தனிச்சிறப்பாக வுள்ளன. கல்லூரி மாணவர்களுக்குத் துணைப் பாடமாக வைப்பதற்கேற்ற வளமுடையது. தமிழைத் தனிமுறையாகப் போற்றிவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழ்நாடு என்றுங் கடப்பாடுடையது.

(உ) பரதசங்கிரகம்

[அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்தமிழ் வெளியீடு. இதன் ஆசிரியர், அறம் வளர்த்தான் என்பவராவர். இதன்பதிப்பாசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் (தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்கள் ஆவர். இதன் விலை ரூபா. 3-0-0.]

இந்நூல் எல்லையில்லா வல்லெதிர்ப்பினிடையே தொன்மைத் தமிழ்ப் பண்ணிசைக்குப் புத்துயிரளித்துப் பண்டுபோல் நிலவச் செய்த அரசவள்ளலார் பல்கலைக்கழகச் சார்பில் வெளிவருவது மிகவும் பொருத்தமான அரும்பணியே.

இதன்கண் 'பரதசாத்திரம்' முதல் 'தாளவியல்' ஈறாகப் பதினைந்து இசைப் பொருள்கள் பேசப்படுகின்றன. பக்கம் நூற்றெண்பத்தாறாகும். குழல் மத்தளம் முதலிய கருவிகள், பரதம் தாண்டவம் முதலிய நடனங்கள், இராகங்கள், தேவதைரூப அவினயம் முதலிய பல தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, நூற்பா முதலியவற்றால் ஆக்கப்பட்டுள்ளது. இதற்குத் தெளிவான பழையவுரையும் காணப்படுகின்றது. பதிப்பாசிரியரவர்கள் மிக முயன்று பல குறிப்புக்களுடன் செப்பனிட்டுள்ளார்கள். பொதுவாக இசை பயில்வார்க்கும் சிறப்பாகத் தமிழ்இசை பயில்வார் பயிற்றுவார்க்கும் இந்நூல் பேருதவியாகும். புதுவதாக இசை யிலக்கணம் யாப்பிலமைப்பார்க்கு இது அடிப்படைத் துணையாகும். இதனைத் தமிழகம் விழைந்தேற்று நன்மையுறும் என நம்புகின்றோம்.

(௩) தமிழிலக்கியம்

[இதன் ஆசிரியர், சென்னை முன்னாள் மேயர் திரு. சு. இராமசுவாமி நாயுடு அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு. இதன் விலை ரூபா. 4-14-0.]

இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியரவர்களால் வேனிற்காலத்து ஆற்றப்பட்ட மூன்றுநாள் சொற்பொழிவின் விளக்கமாகும். நூற்றுமுப்பத்தைந்து பக்கங்களைக்கொண்டது. இந்நூல்

'சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், பிற்கால இலக்கியம்' என முப்பிரிவுகளாக அமைத்துக் கி. மு. 3000 முதல் நாளிதுவரையுள்ள சிறந்த இலக்கண இலக்கியங்கள். அவ்வவற்றிற்குரிய உரைகள், நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாறுகள், காலவரையறைகள், அவ்வக்காலத்து ஆண்ட தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலங்கள், வரலாறுகள், நாட்டுநிலைகள், பிறநாட்டுத் தொடர்புகள், நூலுரை நயங்கள், சமயங்கள், சமயசாரியன்மார், சமய நூல்கள், சமய வழக்குகள், திருக்கோயில்கள், மன்னரும் மக்களும் திருக்கோவில்களையும் தெய்வநெறிகளையும் பேணின வகைகள் முதலிய பலவும் வரன்முறையாகச் செம்மையாய் ஆய்ந்து துணிந்து விளக்கப்பட்டுள்ளன. இனிய எளிய நடைவாய்ந்தது. இவ்வொருநூலைக் கற்பார் தமிழ்நூல்களின் சிறப்பும் சுருக்கமும் எளிதின் உணர்ந்து இன்புறுவர். காலத்தொடு பொருந்திய சிறந்த நூலாகும். தமிழின் தொன்மையும் உண்மையும் உணர்வார்க்கு உறுதுணையாகும். மேலும் இதுவோர் தமிழக வரலாற்று நூலுமாகும். இதனைத் தமிழகம் நன்கு வரவேற்று இன்புற்றுப் போற்றுமென நம்புகின்றோம். பல்கலைக் கழகம் சொற்பொழிவுவாயிலாகவும் தமிழைவளர்க்கும் தனி மாண்பு தலைசிறந்ததாகும். இம்மூன்று நூலுக்கும் குறிக்கப்பட்ட விலைகள் கழிவு நீக்கியே ஆகும்.

(௪) திருக்குறள் ஆராய்ச்சி

[இதன் ஆசிரியர், திரு. M. சோமசுந்தரம் அவர்கள், பி. ஏ. எல். டி. முன்னைத் தலைமை ஆசிரியர். இதன் விலை ரூபா 1-8-0. இது தொண்ணூற்றுறு பக்கங்களைக் கொண்டது. கிடைக்குமிடம் 'ஔவை இல்லம்' காட்டுமன்னார் கோவில் தென்னார்க்காடு மாவட்டம்.]

இஃதோர் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை நூலாகும். பயனார் பகுத்தறிவுச் சார்பாய் எழுந்தது. தொன்மைத்தமிழ் நெறியாம் சிவனெறியின் அடிப்படை உண்மைகளையும், திருமந்திரம், திருவாசக முதலிய திருமுறைகளையும் துணையாகக்கொண்டு எழுந்தது. திருக்குறளில் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபட்டு உரையாசிரியர் பரிமேலழகரும், பிறரும் ஆரியச்சார்பாய்ச் செய்துள்ள உரைகளும் காலம் சொல் முதலிய பிழைபட்ட ஆய்வுகளும் நடு நின்றாய்ந்து வள்ளுவர் மெய்ம்மைக்கருத்து செம்மையாக நாட்டப்பட்டுள்ளது. பல திருக்குறள்களை எடுத்து விளக்கிச் சொல்லும் ஆசிரியர் திறம் போற்றற்குரியது. பொதுவாகப் பழந்தமிழகக் கொள்கை காண்பாரும் சிறப்பாகத் திருக்குறள் ஆய்வுண்மை காண்பாரும் இதனைக் கற்று மெய்ம்மை காண்பாராக. எளிய இனிய உரைநடை. மேலும் இது திருக்குறள் கட்டுரைநூல் போன்று மாணவர் பயிலுதற்கு ஏற்புடையது. பாடக்குழுவினர் பள்ளித் துணைப்பாடமாக வைத்து ஆசிரியரவர்களை ஊக்குவார்களென நம்புகின்றோம். திருவாளர் K. அப்பா துரைப்பிள்ளை, எம். ஏ. எல். டி. அவர்களின் அணிந்துரையும் இதனை அணிசெய்கின்றது.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

18-4-55-இல் சென்னை அண்ணாமலைமன்றத்தில் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்கு நிகழ்ந்த பாராட்டுக்கூட்டம்.

இடமிருந்து வலம்: 1. திரு. ஏ. இலட்சுமணசாமி முதலியார், **2.** இசையரசு, திரு. எம் தண்டபாணி தேசிகர், 3. திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், 4. **பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை**, 5. முதலமைச்சர் திரு. கே. காமராசநாடார், 6. இராசாசர். திரு. மு. அ. முத்தையச் செட்டியார், 7. திருப்புகழ்மணி, திரு. கிருஃச்ண சாமி ஐயர், 8. பயிர்த்தொழில் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் ஆகியோர் திகழ்கின்றனர்.